விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 தை 14 செவ்வாய்க்கிழமை (27.01.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 039

பொதுசன நூலகம்




# முல்லைத்தீவில் பேரவலம்

# ஷெல் தாக்குதலில் 300 பேர் பலி

## ஆயிரத்துக்கும் அதிகமானோர் படுகாயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் - அரசாங்கம் அறிவித்த மக்கள் பாதுகாப்பு வலயமான புதுக்குடியிருப்பு -சுதந்திரபுரம்சந்தி மற்றும் விசுவமடு, உடையார்கட்டு, வல்லிபுனம் ஆகிய பகுதிகளை நோக்கி படையினர் நேற்று திங்கட்கிழமை நடத்திய கண்மூடித்தனமான அகோர பீரங்கி தாக்குதலில் ஆகக்குறைந்தது 300 பேர் வரையில் கொல்லப்பட்டுள்ளதுடன் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர் என தமிழ்நெற் செய்தி வெளியிட்டுள்ளது. *(12ஆம் பக்கம் பார்க்க)*

## தொடரும் மோதல்களால் பலர் பலியாகி வருகின்றனர்

### ஐ.நா. தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தொடரும் மோதல்கள் காரணமாக பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டுவருவதாக ஐக்கிய நாடுகள் சபை நேற்று தெரிவித்துள்ளது.

வடக்கில் மோதல்கள் இடம்பெறும் பகுதியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் சிக்கியுள்ள சூழ்நிலையானது பெரும் நெருக்கடி மிகுந்ததாக மாறியுள்ளதாகவும் அச்சபை குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் வதிவிட ஒருங்கிணைப்பாளர் நீல் புஹறன் ஏ.பி.செய்திச் சேவைக்கு திங்கட்கிழமை அளித்த பேட்டியில் மேலும் கூறியுள்ளதாவது,

அண்மைய வாரங்களாக அரசாங்கப் படையினர் வட பகுதியில் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளிலிருந்து அவர்களை வெளியேற்றி ஒரு சிறிய காட்டுப்பகுதியில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்களுடன் சிறைபடச் *(12ஆம் பக்கம் பார்க்க)*

## பொதுமக்களின் பகுதிகள் மீது இராணுவம் தாக்குதல் நடத்தவில்லை

### இராணுவப் பேச்சாளர் மறுப்பு

(கொழும்பு)

மக்கள் மீது எறிகணைத் தாக்குதல்களை இராணுவம் மேற்கொள்ளவில்லை என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

உடையார்கட்டுப் பிரதேசத்தில் அரசினால் அறிவிக்கப்பட்ட பாதுகாப்பு வலயப் பிரதேசத்துள் மேற்கொள்ளப்பட்ட எறிகணை வீச்சுக்களில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டும் காயமடைந்தும் இருப்பது குறித்து பி.பி.சி க்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது, படையினர் பொதுமக்களின் பகுதிகள், மருத்துவமனைகள் மீது தாக்குவது கிடையாது. நாங்கள் புலிகளின் நிலைகளைத்தான் தாக்கி வருகிறோம். பொதுமக்கள் வாழும் பகுதிகள் மீது தாக்க வேண்டிய *(12ஆம் பக்கம் பார்க்க)*

## இலங்கைக்கு வாருங்கள்; வடக்கைச் சென்று பாருங்கள்

### ஜனாதிபதி மகிந்த, கருணாநிதிக்கு அழைப்பு



(புதுடில்லி)

இலங்கைக்கு நேரடியாக வருகை தந்து வடக்கில் உள்ள மக்களின் உண்மையான நிலைமைகளை அறிந்துகொள்ளுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி மற்றும் *(12ஆம் பக்கம் பார்க்க)*





## முதல்வர் கருணாநிதி வைத்தியசாலையில்

(சென்னை)

முதல்வர் கருணாநிதி முதுகுப்புறத்தில் ஏற்பட்ட தசைப்பிடிப்புக் காரணமாக அதிக அளவிற்கு வலி ஏற்பட்டதால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மருத்துவர்கள் குறைந்தது ஒருவாரத்திற்காவது ஓய்வெடுக்கவேண்டுமென்று வலியுறுத்தியதன் பேரில் சென்னை போரூர் ராமச்சந்திரா மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். *(12ஆம் பக்கம் பார்க்க)*

## வீதிகள் எங்கும் பிணக்குவியல் பாதுகாப்புத் தேடி மக்கள் ஓட்டம்

### எறிகணைத் தாக்குதல் குறித்து வைத்திய அதிகாரி விபரிப்பு

(லண்டன்)

புதுக்குடியிருப்பு சுதந்திரபுரம்சந்தி, மற்றும் விசுவமடு, உடையார்கட்டு,வள்ளிபுனம் பகுதிகளில் வீழ்ந்து வெடித்த எறிகணைகளால் வீதிகள் எங்கும் பிணக்குவியல்களாக காட்சியளிப்பதாக முல்லைத்தீவு வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

பி.பி.சி. தமிழோசைக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் கூறினார். அவர் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டி இங்கு பிரசுரமாகிறது.

இன்று (நேற்று) காலை தொடக்கம் மிகக் கடுமையான எறிகணைத் தாக்குதல்கள் நடைபெற்று *(12ஆம் பக்கம் பார்க்க)*

## புதுக்குடியிருப்பு பகுதியை நோக்கி முன் நகர படையினர் தீவிர முயற்சி

(கொழும்பு)

முல்லைத்தீவு நகரைக் கைப்பற்றியுள்ள படையினர் புதுக்குடியிருப்புப் பகுதியை நோக்கி தீவிர முன்னேற்ற முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்போது படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

புதுக்குடியிருப்பு தெற்கு மற்றும் வடக்கு பகுதிகளிலேயே இந்த மோதல்கள் உக்கிரமடைந்துள்ளன. இதில் புலிகள் தரப்புக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதுடன் இராணுவ தரப்புக்கும் சிறியளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

மோதலில் *(12ஆம் பக்கம் பார்க்க)*

## வன்னி வைத்தியசாலைகளுக்கு அவசர மருத்துவ உதவி தேவை

### முல்லைத்தீவு சுகாதாரப் பணிப்பாளர் கோரிக்கை

(முல்லைத்தீவு)

ஷெல் தாக்குதல்களினால் காயமடைந்த மக்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு அவசர மருத்துவ உதவிகள் தேவைப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அரசாங்கம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஐ.நா.சபை மற்றும் சர்வதேச மருத்துவக் குழு என்பவற்றுக்கு கடிதம் *(12ஆம் பக்கம் பார்க்க)*

# பிரபாகரனை கைது செய்வதற்கு இந்திய - இலங்கை படைகள் தேடுதல்

முல்லைத்தீவில் அடர்ந்த காட்டுப்பகுதி உள்ளது. பிரபாகரன் அங்கு சென்று மலைக் குகைக்குள் இருக்கலாம் என்று கூறப் படுகிறது.

இந்த நிலையில் பிரபாகரனை உயி ருடன் பிடிக்க படைகளுடன் இணைந்து கண்டு பிடிக்க இந்திய உளவுப்படை களம் இறக்கி விடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன.

விடுதலைப்புலிகளின் ஆதிக்கம் நிறைந்த முல்லைத்தீவு வீழ்ந்து விட்டதென இராணு வம் கூறிவருகிறது.

ஆனால் இதுகுறித்து புலிகள் தரப்பில் எதுவும் அறிவிக்கப்படவில்லை. இந்நிலை யில் பிரபாகரன் எங்கிருக்கிறார் என்ற கேள்வி எல்லோரது மனதிலும் ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் அடர்ந்த காட்டுப்பகுதி உள்ளது. பிரபாகரன் அங்கு சென்று மலைக் குகைக்குள் இருக்கலாம் என்று கூறப் படுகிறது என இணையத்தள செய்திகள் தெரிவிக்கின்றது. இதன் அடிப்படையில் இராணுவத்தின் அதிரடிப்படையினரும் முல் லைத்தீவுக் காட்டை முற்றுகையிட்டுள்ளனர். விடுதலைப் புலிகளிடமுள்ள குட்டி விமானங் களைக் கண்டுபிடித்து கைப்பற்ற முன்னு ரிமை கொடுத்து அவர்கள் தேடுதல் வேட்டை நடத்திவருகிறார்கள்.

இந்தநிலையில் பிரபாகரனை உயிருடன் பிடிக்க இந்தியாவும் ஆர்வம் காட்டத்தொடங் கியுள்ளதாகவும் பிரபாகரன் இருக்கும் இரகசிய இடத்தை கண்டுபிடிக்க இந்தி உள வுப்படை களமிறக்கிவிடப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அவர்கள் பிரபாகரன் பற்றிய தகவல்களை சேகரித்து வருகிறார்கள்.

இது தவிர இலங்கையைச் சுற்றி இந்திய கடற்படைக் கப்பல்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. இலங்கை இராணுவ கப்பல் களுடன் இந்திய கடற்படை கப்பல்களும் ஒருங் கிணைந்து செயல்படுவதாகவும் தக வல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது இலங்கையின் எந்த பகுதி யிலும் விடுதலைப் புலிகள் வலுவாக இல்லை என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது என்று இராணுவம் கூறிவருகிறது. (எ-1)

# அதிபர்களுக்கான கருத்தரங்கு பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தினால் 'ஊடகக் கல்வி அறிவும் பாடசாலை மாணவர்களும்' என்ற விடயப் பொருளில் நாளை 28ஆம் திகதி பாடசாலை அதிபர்களுக்கு நடத்தப்பட விருந்த கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார். கருத்தரங்கு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள் ளார். (ந)

# வன்னிக்குச் செல்ல அனுமதிக்குமாறு பாதுகாப்புச் செயலருக்குக் கடிதம்

## நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு அனுப்பிவைப்பு

(கொழும்பு)

வன்னிக்கு செல்ல அனுமதிக்குமாறு மனித உரிமைகளுக்கான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் அனுமதி கோரியுள்ளது.

வன்னி மற்றும் வன்னியில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் வவுனியா மற்றும் மன்னாரில் தங்கவைக்கப்பட்டிருக்கும் முகாம்களுக்குச் சென்று பார்வையிட அனு மதிக்கவேண்டும் என அந்தக்குழு கோரிக் கை விடுத்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெய லத் ஜயவர்த்தன, மனோ கணேசன், ஹசன் அலி, சவீஃக் ரஜாப்டீன், தலதா அத்துகோரள ஆகியோர் அடங்கிய குழுவினரே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் 37 அரசியல் கட்சிக ளின் பிரதிநிதிகள் இணைந்து உருவாக்கி யிருக்கும் மனித உரிமைகளுக்கான நாடா ளுமன்ற குழுவைச் சேர்ந்த ஐவர் வன்னிக்கு செல்ல அனுமதிக்க வேண்டும் என, இக்குழுவின் பொதுச் செயலாளர் ஜெயலத் ஜயவர்த்தன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தம்மை வன்னிக்கு செல்ல அனுமதிக்க வேண்டும் என வன்னி இராணுவக் கட்ட ளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் ஜெய சூரியவிடம் கோரிக்கை விடுத்துள்ள போதும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அனு மதிபெற்ற பின்னரே அனுமதி வழங்க முடியும் என தனது கடிதத்திற்கு பதில் கடிதம் எழுதியிருந்ததாக ஜயவர்த்தன கூறினார்.

இந்த நிலையில் வன்னிக்கு சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராய்வதற்கு தம்மை அனுமதிக்க வேண்டும் என ஜயலத் ஜயவர்த்தன கோத்தபாய ராஜபக்ஷவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார். (ச-5)

# 5 வருடங்களின் பின் நடைபெற்ற உதைபந்தாட்ட பயிற்சி முகாம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை உதைபந்தாட்ட வீரர்களுக் கான உதைபந்தாட்ட பயிற்சி முகாம் ஒன்று கடந்த 25ஆம் திகதி புனித பத்திரிசியார் கல்லூரியில் நடைபெற்றது.

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப் பட்ட பயிற்சி முகாமை பத்திரிசியார் கல்லூரி அதிபர் வண. பிதா ஜெறோம் செல்வநாயகம் சம்பிரதாய முறைப்படி தொடங்கி வைத்தார்.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவரும் பரியோவான் கல்லூரியின் உப அதிபரு மான கிளிபேட் அந்தனிப்பிள்ளையின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இப்பயிற்சி முகாமில், பாடசாலைக்கு ஒரு வீரர் என்ற ரீதியில் 20 வீரர்கள் கலந்துகொண்டனர்.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேள னத்தின் யாழ்.மாவட்ட இளைஞர் இணைப் பாளர் எம்.பேட்டி பனிஸ்ரரின் தலைமையில் ஏ.சுரேந்திரன், ரி.நித்திலநாயகம், எஸ்.சுரேஸ் ஆகிய அனுபவம் மிக்க பயிற்றுநர்கள் பயிற்சிகளை வழங்கினர்.

இவ்வாறான பயிற்சி முகாம் ஒன்று ஐந்து வருடங்களுக்கு முன்னர் கொல்கர் ஒபமா னால் யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேள னத்தின் அனுசரணையுடன் இலங்கை உதைபந்தாட்ட வீரர்களுக்கு பயிற்சி அளித்து வரும் கொல்கர் ஒபமானால் அன்பளிப்புச் செய்யப்பட்ட உதைபந்தாட்ட சீருடைகள் இம்முகாமில் பங்கு பற்றிய வீரர்களுக்கு லீக்கின் தலைவரால் வழங்கப்பட்டது. (ஒ-110)

# வர்த்தகரைக் காணவில்லை காத்தான்குடியில் ஹர்த்தால்

(மட்டக்களப்பு)

காத்தான்குடியில் முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் காணாமல் போனதைத் தொடர்ந்து காத்தான்குடியில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப் படுகிறது. வர்த்தகரும், சமூக சேவை யாளருமான ஏ.எல்.எம்.நசார் (38) நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் காணாமல் போயுள்ளார்.

காத்தான்குடி முதலாம் குறிச்சியிலுள்ள தனது காணிக்குச் சென்ற அவர் மீண்டும் வீடு திரும்பவில்லையென அங்கிருந்து கிடைக் கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காணியில் மோட்டார் சைக்கிள் காணப் படுகின்ற போதும் அவர் காணாமல் போயி ருப்பதாக காத்தான்குடி செய்திகள் தெரிவிக் கின்றன.

இந்த சம்பவத்தை கண்டித்து காத்தான் குடியில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகிறது.

காத்தான்குடி வர்த்தக சங்கத்தின் கோரிக் கைக்கு அமைய காத்தான்குடியிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப் பட்டிருப்பதுடன் மட்டக்களப்பு நகரிலுள்ள காத்தான்குடி வர்த்தகர்களின் வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டுள்ளன. (ச-5)

# பரிபாலன சபை தெரிவு

வட்டுக்கோட்டை அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய புதிய பரிபாலன சபை, தொண்டர் சபை என்பன தெரிவு செய்யப்பட்டுள்ளன. பரிபாலன சபைத் தலைவராக கலக்விசுவ நாதன் (ஜே.பி.), செயலாளராக அ.சுபேசன், பொருளாளராக சி.ஸ்ரீஜீவா ஆகியோரும் 15 பேர் சபை உறுப்பினராகவும் தெரிவு செய்யப் பட்டனர்.

தொண்டர் சபையின் தலைவராக சி. கௌரீதரனும், செயலாளராக சி.றிசிகேசன் மற்றும் பொருளாளராக அ.ரமேசனும் 12 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாகத்தராக அ.அழகேந் திரன் தெரிவு செய்யப்பட்டார். (ச)

# தென்மராட்சியில் உபஅஞ்சல் அதிபரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பகுதியில் உப அஞ்சல் அதி பர் ஒருவர் காணாமல் போ[illegible]ருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்கு[illegible] முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

விடத்தல்பளை அஞ்ச[illegible]நிலையத்தின் உப அஞ்சல் அதிபராக கடமையாற்றும் சற்குணநாதன் குணதாசன் (19) என்பவர் கடந்த 19 ஆம் திகதி நள்ளிரவு 12.30 மணிமுதல் காணாமல் போயுள்ளார்.

வீட்டிலிருந்த அவர் காணாமல் போயிருப் பதாக அவரின் உறவினர்கள் மனித உரிமை கள் ஆணைக்குழுவிலும் கொடிகாமம் பொ லிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள் ளனர். (எ -1)

# சீனி, கோதுமை மா விநியோகம்

யாழ். மாவட்டத்திற்கு கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட சீனி, கோதுமை மா ஆகியன மாவட்டத்திலுள்ள 24 ப.நோ.கூ. சங்கங் களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒருகிலோ சீனியின் ப.நோ.கூ. சங்கங்களின் விற்பனை விலை 77ரூபாயாகவும் ஒருகிலோ கோதுமை மாவின் ப.நோ.கூ. சங்கங்களின் விற்பனை விலை 72 ரூபாயாகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பொருட்களுக்கான வழங்கற் கட்டளைகளை ப.நோ.கூ.சங்கங்கள் இன்று மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயல கத்தில் பெற்று, பொருட்களை முழுமையாக களஞ்சியங்களிலிருந்து பெற்று பொதுமக் களுக்கு விநியோகிக்குமாறு அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ச)

# யாழின் அபிவிருத்திப் பணிகளின்போது பொதுமக்களின் கருத்துகளுக்கே முதலிடம்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப் பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களின்போது பொதுமக்களின் கருத்துகளுக்கே முதலிடம் வழங்கப்படுமென சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வட மாகாணத் திற்கான விசேட செயலணியின் தலைவ ருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித் துள்ளார்.

நேற்று கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதியின் குறைபாடுகள், தேவைகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக் கைகள் தொடர்பில் ஆராயப்பட்டது. இதன் போது கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் வாழ்ந்து வருகின்ற பொது மக்களின் தேவைகளை அம் மக்களின் மூலமே அறிந்து, அவர்களது கருத்துகளுக்கு முதலிடம் கொடுத்து, அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளையும் ஆரம்பிப்பதே தனது எதிர்ப்பார்ப்பாகும் என்பதை வலியுறுத்தியுள்ள அமைச்சர், பொதுமக்களின் நேரடி பங்களிப் புகள் இல்லாத அபிவிருத்தித் திட்டங்களால் உரிய பயனேதும் கிட்டப்போவதில்லை என்றும் தெரிவித்தார்.

எனவே பொதுமக்கள் முன்வந்து தங் களது பகுதிகளில் நிலவுகின்ற குறைபாடு களையும் தேவைகளையும் சமூக நோக்குடன் முன்வைக்கவேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ச)

# வெளிநாட்டுத் தொழிலாளர்கள் மலேசியாவுக்குச் செல்லத் தடை

(கோலாலம்பூர்)

வெளிநாடுகளில் இருந்து புதிதாக பணி யாளர்களை வாடகைக்கு அமர்த்துவதை மலேசியா தடைசெய்துள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக தமது நாட்டுப் பிரஜைகள் வேலையில்லாப் பிரச்சினையை எதிர்நோக்குவதை தடுக்கும் நோக்கிலேயே தாம் இந்த தீர்மானத்துக்கு வந்ததாக மலேசியா அரசாங்கம் அறிவித் துள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக ஆட்குறைப்பு செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் முதலில் வெளிநாட்டு பணியாளர் களை வேலையில் இருந்து நிறுத்துமாறு மலேசியா அரசாங்கம் தொழில் தருநர்க ளுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளது.

ஆசியாவிலேயே பெருமளவு தொழி லாளர்களை இறக்குமதி செய்யும் நாடாக மலேசியா விளங்குவதுடன், இந்தோ னேசியா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்தே பெருமள வானவர்கள் மலேசியாவுக்கு சென்று வருகின்றனர்.

மலேசிய அரசாங்கத்தின் இந்த புதிய தடையுத்தரவால் வெளிநாட்டு பணியா ளர்களை நம்பி முதலீடு செய்திருக்கும் முதலீட்டாளர்களுக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என கூறப்பட்டுள்ளது.

45 ஆயிரம் பேர் இந்த மாத இறுதியில் வேலைகளில் இருந்து நிறுத்தப்பட விருப் பதாக மலேசியாவின் உள் துறை அமைச்சர் செய்ட் அஹமட் தெரிவித்தார்.

தொழில் தருநர்கள் வெளி நாட்டுப் பணியாளர்களைக் கோருவதற்கு இது தருண மல்ல என்றும் அவர் கூறியுள்ளார். (ச-5)

# இன்று ஒரு தகவல்

## இல்லறமா? துறவறமா?

மனிதர்களில் இல்லற வாழ்வு நடத்துபவர்களும் உண்டு; துறவறவாழ்வு நடத்துபவர்களும் உண்டு. இந்த இருவரில் யார் சிறந்தவர்கள்?

இல்லறத்தவரா? துறவியா?

இந்த சந்தேகம் ஒரு ராஜாவுக்கு வந்தது. ஒருநாள் ஒரு துறவி அரண்மனைக்கு வந்தார். அவரிடம் ராஜா இந்தக் கேள்வியைக் கேட்டார். இதற்கு துறவி சொன்னபதில் :

''அவரவர்கள் இடத்தில் அவரவர்கள் சிறப்பாக இருக்கலாம்!'' என்றார்.

"பதில் விளங்கவில்லையே" என்றார் ராஜா.

"என்னுடன் வா. புரியவைக்கிறேன்!" என்று துறவி ராஜாவை அழைத்துக்கொண்டு இன்னொரு நாட்டுக்குப் போனார்.

அங்கே அரண்மனையில் ஒரு சுயம்வரம் நடந்து கொண்டிருந்தது. அரசகுமாரர்கள் பலர் அங்கு வீற்றிருந்தார்கள். இவர்கள் இருவரும் சுவட்டத்தோடு சுவட்டமாக அங்கு போய் நின்றார்கள். இவர்களின் பக்கத்தில் ஓர் இளம் சந்நியாசி நின்றார். பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தார்.

அரசகுமாரி கையில் மாலையுடன் வந்து கொண்டிருந்தார். அரச குமாரர்கள் யாரையும் பிடிக்கவில்லை. நேராக வந்து இந்த இளம் சந்நியாசியின் கழுத்தில் மாலையைப் போட்டார். உடனே அவர், "என்ன இது... நான் சந்நியாசி. எனக்குத் திருமணமா?" என்று சொல்லி மாலையைக் கழற்றி எறிந்து விட்டார்.

"அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். என் பெண்ணின் அழகைப் பாருங்கள். இப்பொழுதே உங்களுக்குப் பாதி இராஜ்ஜியத்தைத் தருகிறேன். எனக்குப் பின்னர் முழு இராஜ்ஜியமும் உங்களுக்குத்தான்'' என்றான் அந்த நாட்டு அரசன்.

''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். என்னை விட்டு விடுங்கள்'' என்று சொல்லி அந்த இளம் சந்நியாசி அங்கிருந்து ஓட ஆரம்பித்தார்.

அரச குமாரியும் பின்னால் ஓட அவர் பின்னால் நம்முடைய ராஜாவும் துறவியும் ஓடினார்கள். இளம் சந்நியாசி எங்கோ ஓடிப்போய் மறைந்து விட்டார். அரசகுமாரி ஒன்றும் புரியாமல் ஒரு மரத்தடியில் அழுது கொண்டிருந்தார். இருட்டி விட்டது. ராஜாவும் துறவியும் பார்த்தார்கள்.

"அம்மா... கவலைப்படாதே! நாளைக்குக் காலையில் பொழுது விடிந்ததும் உன்னை அரண்மனையில் கொண்டு போய் விட்டுவிடுகிறோம்'' என்றனர்.

மரத்தடியில் இவர்கள் மூவரும் ஒதுங்கியிருந்ததை அந்த மரத்திலிருந்த இரண்டு புறாக்களும் அதன் மூன்று குஞ்சுகளும் பார்த்தன.

வந்தவர்களுக்கு சாப்பாடு கொடுக்க வேண்டாமா? என்று சொல்லி ஆண்புறா பறந்துபோய் சுள்ளிகளும் நெருப்பும் கொண்டுவந்து மரத்தடியில் போட்டது.

ஐந்து புறாக்களும் அவர்கள் முன் வந்து நின்று... "எங்களை நீங்கள் சாப்பிடுங்கள். உங்கள் பசியைப் போக்குங்கள்'' என்றன.

இப்பொழுது அந்தத்துறவி சொன்னார் : "தன்னுடைய உயிரைக் கொடுத்தாவது பிறருக்கு உதவி செய்யும் இல்லறத்தான் சிறந்தவன் என்பதற்கு இந்தப் புறாக்கள் உதாரணம். துறவி என்றால் எதையும் உதறித் தள்ளுவான் என்பதற்கு அந்த இளம் சந்நியாசி உதாரணம். அதனால் அவரவர் இடத்தில் அவரவர் சிறப்பாக இருக்கலாம்!'' என்றார்.

சுவாமி விவேகானந்தர் இந்தக் கதையைச் சொல்லியிருக்கிறார். (விவேகானந்தரின் நூல்கள் என்ற ஆங்கிலப்புத்தகம்) அதனால் இல்லறமா துறவறமா என்பது முக்கியமில்லை.

இல்ல்றத்தில் இருந்து கொண்டு துறவறத்தை நினைக்கக்கூடாது. துறவறத்தில் இருந்து கொண்டு இல்லற தர்மத்தைக் கடைப்பிடிக்கப் போகிறேன் என்று சொல்லக் கூடாது. சில சுயம்வரங்களில் சந்நியாசி ஓடினது மாதிரி இளவரசர்களே ஓடுவதுண்டு.

ஒரு ராஜா தன் பெண்ணுக்கு சுயம்வரம் நடத்தினார். பல நாட்டு அரசகுமாரர்கள் வந்திருந்தார்கள். சுயம்வர நாள்...

அரண்மனைக்குள் இருந்து அரசகுமாரர்கள் அலறியடித்துக் கொண்டு ஓடிவந்தார்கள். ஒரு பெரியவர் இதைப் பார்த்துவிட்டு அமைச்சரிடம்,

"ஏன் அந்நிய தேசத்து இளவரசர்களெல்லாம் இளவரசியைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் வந்துவிட்டு இப்படி ஓடுகிறார்கள்? நம் இளவரசியை அவர்கள் பார்க்கவில்லையா? என்றார்.

"பார்த்த பின்புதான் இப்படி ஓடுகிறார்கள்'' என்றார் அமைச்சர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வாகனப் பதிவுச் சான்றிதழ்களை உரியவர்கள் பெற்றுக் கொள்ளவும்

(கொழும்பு)

உரிமையாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டு உரியவர்கள் குறித்த முகவரியில் இல்லாத காரணத்தினால் திரும்பிய வாகன பதிவுச் சான்றிதழ் விபரம் கொழும்பு அலுவலகத்திலிருந்து மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் பதிவுத் தபால் மூலம் வாகன பதிவுச் சான்றிதழ்கள் வாகன உடமையாளர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தன.

உரியவர்கள் குறித்த முகவரியில் இல்லாத காரணத்தினால் தபாலில் விநியோகம் செய்யப்படாத வாகன பதிவுச் சான்றிதழ்கள் யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

உரியவர்கள் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் வாகன ஆவணங்களுடன் அலுவலக நாட்களில் நேரில் வந்து வாகன பதிவுச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வ. பத்மநாதன் அறிவித்துள்ளார்.

பதிவுச் சான்றிதழ் விபரம் வருமாறு :-

201- 4646 மா. இராசேந்திரா - வட்டுக்கோட்டை, NP ME - 3530 மு. தங்கராஜா - திருநெல்வேலி, NP HF - 8331 அ. செல்வானந்தன் - ஓட்டுமடம், யாழ்ப்பாணம், NP JI - 4613 இ. சிறிகண்ணன் - காரைநகர், NP JC - 2711 சி.சண்முகராசா - வண்ணார்பண்ணை, NP HE - 2336 ம. ரசிகரன் - கீரிமலை, 16 Sri 3946 சு. தர்சினி - தொண்டைமானாறு, NP GC - 6486 இ. ஜெயச்சந்திரன் - வல்வெட்டித்துறை, NP JU - 7732 தி. பன்னீர்ச்செல்வன் - மீசாலை.

106 Sri 4033 வை. விஜய குமரன் - கீரிமலை, 500 - 7158 சு. கிட்டிணன் - காங்கேசன்துறை, NP GG - 9909 இ. சிவகுமரன் - திருநெல்வேலி, NP MP - 2039 க. கஜீரன் - யாழ்ப்பாணம், 132 - 5098 க. கணபதிப்பிள்ளை - யாழ்ப்பாணம், 44 Sri - 7420 த. நந்தகுமார் - வசாவிளான் தெற்கு, NP GO - 8469 பொ. குபேந்திரநாதன் - பலாலி கிழக்கு.

NP GO - 6162 சி. சிவமதி - கந்தர்மடம், யாழ்ப்பாணம், NP MB - 1392 கா. நிருபன் - கோப்பாய் தெற்கு, NP MB -1403 கு. இந்திரகுமார் - மாதகல் வடக்கு, NP MF - 3434 சு. ரஜனிகாந் - உரும்பிராய் வடக்கு; NP JP - 0174 பொ. அருமைச்சந்திரன் - பருத்தித்துறை.

NP MF - 3386 செ. மரியதாஸ் - யாழ்ப்பாணம், NP JL - 6540 அன்ரனி ஜீவேந்திரா போல் - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், NP MQ - 6789 இ. ரமேஷ் - திருநெல்வேலி கிழக்கு.

NP MQ - 6551 இ. மோகனதாஸ் - புலோலி வடக்கு, NP MW - 3444 மாவட்ட சிறுவர் பாதுகாப்புச் சபை - போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம், NP MH - 8524 செ. அருணாசலம் - யோகபுரம் மல்லாவி.

NP ME - 3466 சமூக அபிவிருத்தி சபை - 60, அரசடி றோட், யாழ்ப்பாணம், NP MB - 1374 யோ. பிறேமதாஸ் - மணல்காடு, குடத்தனை.

NP MQ - 6539 து. தேவகுமார் - மயிலிட்டி வடக்கு, MP MH - 8493 து. ராஜிகரன் - புலோலி கிழக்கு, NP MX - 3339 ம. யோகராசா - திருநெல்வேலி.

NP MQ - 6519 ந. யாதவகுலசிங்கம் - பண்டாரக்குளம், NP MX - 3087 பா. ஜெயசங்கர் - யாழ்ப்பாணம், NP JS - 3211 பா.யசிதரன் - அல்லாரை தெற்கு, NP MX - 3128 சி. தீபன் - சாவகச்சேரி, NP MQ - 6771 ஜெ. ஜெயராஜ் - மாதகல், 108 Sri 3984 ச. கந்தையா - வைமன் றோட், நல்லூர், NP HE - 7234 பி. நிசாந்தன் - முஸ்ம் றோட், நாவாந்துறை.

110 - 9986 க. இராச லிங்கம் - அரியாலை கிழக்கு, 500 - 3045 தெ. மதனரூபன் - கோவில்வீதி, நல்லூர், NP GQ - 0929 செ. நாகராஜா - அச்சுவேலி வடக்கு, NP JD - 6972 ந. கனகராஜா - இணுவில் கிழக்கு.

NP JY - 8386 வி. தேவநாயகி - மீசாலை மேற்கு, 124 - 1312 யே. சேவியர் - நாவற்குழி தெற்கு, NP HI - 4077 க. ஈஸ்வரன் - கல்வியங்காடு, NP HA - 2238 சி. உதயகுமார் - கொழும்புத்துறை, NP JQ - 2311 நி. பரணிதரன் - க்ல்வியங்காடு.

86 Sri 0747 சி. முத்துக் கிட்ணர் - நாவலர் றோட், யாழ்ப்பாணம், NP GK - 1851 உ. றூபா - பலாலி றோட் - யாழ்ப்பாணம், 142 - 3580 இ. இராசேந்திரம் - அரியாலை. (ஓ)

# இராசி பலன்

27.01.2009

(தை14, செவ்வாய்க்கிழமை)

திருவோணம் முற்பகல் 11.13 மணிவரை

பிரதமை பிற்பகல் 3.33 மணிவரை

இராகுகாலம் 3.36-5.06 மணிவரை

சுபநேரம் 11.06-12.36 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | நண்பர்கள் உதவி, தூரதேசச் செய்தி, கடின முயற்சி, உடல் நலம். |
| இடபம் | காரிய தாமதம், பொருள் விரயம், சரீரப் பிரயாசை, ஆழ்ந்த சிந்தை. |
| மிதுனம் | முயற்சி தடங்கல், வாகன பயம், போசன சுகம், வீண் பகை. |
| கடகம் | களஸ்திர நன்மை, செல்வாக்கு, பயணம், முயற்சி பலிதம். |
| சிங்கம் | கலந்துரையாடல், சத்துரு ஜெயம், போசன நன்மை, தடைப்பட்ட காரியம் கைகூடும். |
| கன்னி | ஆரோக்கியக்குறைவு, பண விரயம், காரிய தாமதம், மனச் சஞ்சலம். |
| துலாம் | முயற்சி தாமதம், மாதா சுகம், பிரயாண நன்மை, கல்வியில் ஆர்வம். |
| விருச்சிகம் | காரிய நன்மை, போசன சுகம், கூட்டுமுயற்சி, உறவினர் சந்திப்பு. |
| தனுசு | ரோக நிலை, விவாதம், திடீர் நன்மை, முயற்சி தாமதம். |
| மகரம் | சுபசெய்தி, போசன சுகம், நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை. |
| கும்பம் | காரிய அலைச்சல், சுபசெலவு, சகோதரர் உதவி, எதிர்பாராத நன்மை. |
| மீனம் | தொழில் வருமானம், நண்பர்கள் சந்திப்பு, உடல் நலம், எடுத்த கருமங்கள் கைகூடும். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 160 |
| உருளைக்கிழங்கு | 160 | 140 |
| பச்சைமிளகாய் | 400 | 500 |
| தக்காளி | 350 | 400 |
| அவரை | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 |
| கோவா | 140 | 140 |
| கரட் | 170 | 120 |
| பூசணி | 80 | 80 |
| புடோல் | 60 | 60 |
| வாழைக்காய் | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 80,120,140 |
| பெரிய வெங்காயம் | 150 | 200 |
| பாகற்காய் | 120 | 150 |
| வெண்டிக்காய் | 80 | 100 |
| கரணைக் கிழங்கு | 40 | 60 |
| பயிற்றங்காய் | 100, | 180 |
| லீக்ஸ் | 140 | 140 |
| போஞ்சி | 130 | 140 |
| கீரை - 1 பிடி | 10 | 20 |
| தேசிக்காய் | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 30 |

(7)



2008 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தினால் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் சங்கத்தலைவர் மா. நாகலிங்கத்தால் மாணவியொருவர் கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

## சேவை நலன் பாராட்டு விழா

(அல்வாய்)

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய அதிபர் ஆ.ஜெகநாதனுக்கு இன்று செவ்வாய்க்கிழமை பாடசாலை சமூகத்தினரால் சேவை நலன் பாராட்டு விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஓ-19)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய மணவாளக்கோல அஷ்டோத்திர சத (108) சங்காபிஷேகம் இம் மாதம் 31 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் காலை 7 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி பகல் 11.30 மணிமுதல் 1.30 மணிவரையுள்ள சுபவேளையில் சங்காபிஷேகமும் மணவாளக் கோலவிழாவும் நடைபெறும்.

அத்துடன் மாலை 3 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று அம்பாள் உள்வீதி, வெளிவீதி உலா வருதல் நிகழ்வும் இடம்பெறும். (ஓ-6)

## புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை அண்ணா சனசமூக நிலையத்தின் நடப்பாண்டிற்கான புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக யோ. பத்மநாதன், உப தலைவராக வே.பன்னீர்செல்வம், செயலாளராக சி.செல்வநாயகம், உப செயலாளராக யோ. தர்ஷன், பொருளாளராக செ.மதிவதனி, காப்பாளராக மா.தவக்குமார் ஆகியோரும் நிர்வாகசபை உறுப்பினர்களாக த.உதயகுமார், இ.கோவிந்தராசா, ஆ.சாந்தகுமார், மேரி எமில்டா, ஆ.மனோறஞ்சன், இ.றதி, இ.விஜேந்திரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ஓ-6)

## மரக்கன்றுகள் விநியோகம்

(நீர்வேலி)

வலி.கிழக்கு பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பினால் கிராம அபிவிருத்திச் சங்கத்தினருக்கு பயன்தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு நீர்வேலி தெற்கு மாதர் சங்கத்தில் இடம்பெற்றது.

வலிகிழக்கு பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மனித நேய அமைப்புக்களின் கூட்டமைப்பு சுற்றாடல் இணைப்பாளர் சொ.கிரிதரன் கலந்து கொண்டு இம் மரக்கன்றுகளை வழங்கினார்.

பயன்தரு மரங்களான மா, பலா, கொய்யா மற்றும் நிழல்தரும் மரங்களான மலைவேம்பு, சமண்டலை, தேக்கு ஆகிய மரக் கன்றுகளே இந்நிகழ்வில் வழங்கப்பட்டன. இம் மரக்கன்றுகள் பொதுஅமைப்புக்கள் மூலம் கோவில்கள், சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றில் நாட்டப்பட்டன. (ஓ-25)

# கல்வி அபிவிருத்திப் பயணம் நூல் வெளியீட்டு வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய கல்வி அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகத்தின் வழிகாட்டலில் "கல்வி அபிவிருத்திப் பயணம்" எனும் நூல் வெளியீடு எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நூல் டிசம்பர் மாத விடுமுறைக் காலத்தில் விசேட பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், முதன்மையாசிரியர்கள் ஒருங்கிணைந்து தமது பாடத்தின் இன்றைய நிலை, தமது எதிர்பார்ப்பு, அதை அடையும் நிலை பற்றிய தயாரித்த அறிக்கைகள் கொண்டமைந்துள்ளது. மல்டி மீடியா முன்வைப்புக்களுடன் வெளியீடு செய்யப்படுவது இந்நூலின் சிறப்பம்சமாகும்.

யாழ். வலயப் பாடசாலைகளுக்கு அபிவிருத்தி நோக்கில் இந்நூல் இலவசமாக வழங்கப்படவுள்ளது. வலய அலுவலர்களால் நடத்தப்படும் இந்நிகழ்வில் யாழ்.வலய அதிபர்கள் அனைவரையும் பங்கேற்று சிறப்பித்துப் பயன்பெறுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ-7)

## வலி மேற்கு பிரதேச செயலக கழகங்களுக்கிடையேயான துடுப்பாட்ட, கரப்பந்தாட்ட போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கழகங்களுக்கிடையேயான விளையாட்டு நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக கடந்த இரண்டு வாரங்களாக நடைபெற்ற துடுப்பாட்ட கரப்பந்தாட்ட போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

மேற்படி துடுப்பாட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் சங்கானை ஞானவைரவர் விளையாட்டுக் கழகம் சம்பியனாகவும் இரண்டாம் இடத்தினை அராலி மத்திய கல்லூரி விளையாட்டுக் கழகமும் பெண்கள் பிரிவில் சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனாகவும் இரண்டாம் இடத்தினை அராலி மத்தி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன.

மேலும் கரப்பந்தாட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் சங்கானை இந்து இளைஞர் மன்ற விளையாட்டுக் கழகம் சம்பியனாகவும் சங்கானை மாவடி விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டன.

பெண்கள் பிரிவில் சங்கானை இந்து இளைஞர் மன்ற விளையாட்டுக் கழகம் சம்பியனாகவும் சங்கானை ஞான வைரவர் விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன. (ஓ)

## நவீனசந்தை பகுதியில் கழிவுநீர் கால்வாய்களில் கழிவுநீர் தேக்கம்

(கோண்டாவில்)

யாழ்.நகரின் நவீன சந்தையின் உட்புறத்தில் அமைக்கப்பட்டுள்ள கால்வாய்களில் கழிவுநீர் ஓடமுடியாமல் தேங்கி நிற்கிறது. இதனால் துர்நாற்றம் வீசுகின்றது.


வியாபார நிலைய ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் துவிச்சக்கர வண்டிகள், வியாபார நிலையங்களின் முன்னால் சந்தையின் உட்புறத்தே நிறுத்தப்படுவதனால் இட நெருக் கடியும் போக்குவரத்து பிரச்சினையும் ஏற்படுகின்றது.

இக் குறைகள் நிவர்த்தி செய்யப்படுமா? என வர்த்தகர்கள் கேட்டுள்ளனர். (ஓ-36)

## யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் நாளை புதன்கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்திக்கவுள்ளதால் சகல தொண்டர் ஆசிரியர்களையும் காலை 8.30 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் ஒன்று கூடுமாறு தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. (ஓ-2)




## க.பொ.த.(உயர் தர) பரீட்சை பெறுபேறுகள்

**வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்**

கலைப் பிரிவு

3A - வ.அகிலாயினி, ப.துளசி, ம.கிறிஸ்ரீனா, ம.சுகிர்தன்

2A,B- கு.தசிகரன், தி.மதன்ராஜ், ர.நிலக்ஷன், உ.சௌந்தீசன், பா.தினேஸ்குமார், சி.சரண்யா

**சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்**

கலைப் பிரிவு

3A - இ.நிரோஜா,

2A,B - ச.கங்கா

வர்த்தகப் பிரிவு

2A,B- து.சங்கரதாஸ்

## தரவட்டச் செயன்முறை

(யாழ்ப்பாணம்)

வரணி தரவட்டத்தின் ஆண்டு 11 விஞ்ஞான செயன்முறை நாளை புதன்கிழமை காலை 7 மணிக்கு வரணி ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயன்முறைக்கு வளவாளர்கள், விஞ்ஞான ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரை சமுகம் தருமாறு குடமியன் அ.த.க. பாடசாலை விஞ்ஞான ஆசிரியரும் செயன்முறை ஒருங்கமைப்பாளருமான பொ. யோகராஜா கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ-6)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான மாதாந்த பொதுக் கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான மாதாந்தப் பொதுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளதாகவும், கூட்டத்தில் உரிய பகுதி நேர ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளும்படியும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் தெரிவித்துள்ளார். (ஓ-29)

## சாவகச்சேரி, சனசமூக நிலையங்களுக்கு நகரசபை செயலாளரின் அறிவித்தல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் தமது நிலையத்தின் பின்வரும் ஆவணங்களை பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதிக்கு முன்னர் சபைக் காரியாலயத்தில் ஒப்படைத்து உறுதிசெய்து கொள்ளுமாறு சபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் அறிவித்துள்ளார்.

2008 ஆம் ஆண்டுக்கான பொதுக் கூட்ட அறிக்கை, கணக்கு அறிக்கை, வங்கி வைப்புப் புத்தகம், இறப்பர் முத்திரை என்பவற்றையே சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஓ-29)

## கியூடெக் நிறுவனத்தினால் கிணறு துப்புரவுப் பணிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கியூடெக் நிறுவனத்தினரால் நிஷா புயல் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட 45 கிணறுகளை சுத்தம் செய்து இறைத்து குளோரின் போடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதுவரை காலப் பகுதியில் 12 கிணறுகள் இறைத்துத் துப்புரவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-134)

## மாலை நேர மீன் சந்தை

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறையில் இவ் வருட ஆரம்பத்திலிருந்து மாலைநேர மீன் சந்தை இயங்கிவருகின்றது.

இச் சந்தையில் மலிவு விலையில் கடலுணவுகள் விற்கப்பட்டு வருகின்றன. (ஓ-72)

## யாழ்.வலயக் கல்வி அலுவலர்கள் பாடசாலைகளுக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இதுவரை கிடைக்கப் பெற்ற இலவச பாடநூல்களில் தமக்குரிய நூல்களை ஒவ்வொரு மாணவரும் பெற்றிருப்பதை அதிபர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

பாடநூல்கள் பற்றாக்குறை இருப்பின் ஏனைய பாடசாலைகளில் இருந்தோ ஏனைய கோட்டக் கல்வி அலுவலகங்களில் இருந்தோ பெற்று உரிய மாணவர்களிற்கு வழங்கப்பட வேண்டும்.

இப்பணி சீராக நடைபெற்றிருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் பெப்ரவரி 2,3 ஆம் திகதிகளில் யாழ். வலய அலுவலர்கள் பாடசாலைகளுக்கு சமுகமளிக்க உள்ளனர் என வலயக் கல்விப் பணிப்பாளர் அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (ஓ-7)



வலி மேற்கு பிரதேச செயலக கழகங்களுக்கிடையேயான பெண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட சங்கானை இந்து இளைஞர் மன்ற விளையாட்டுக் கழக வீராங்கனைகளையும், இரண்டாம் இடத்தினைப் பெற்றுக் கொண்ட சங்கானை ஞானவைரவர் விளையாட்டுக் கழக வீராங்கனைகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:-கிருஸ்ணா)

# இலங்கையில் தமிழர் 52

### ஆரியரும் திராவிடரும்

வடமேற்கிலும் வடக்கிலும் ஏற்பட்ட தாய் மொழி மாற்றத்தை ரோமிலா தாபர் பின் வருமாறு விளக்கி எடுத்துரைத்துள்ளார். வேத நூல்களின் சமஸ்கிருதத்தை ஆய்வு செய்தால் அம்மொழி பிரதிபலிக்கும் மொழி மாற்றத்தின் மூலம் இரு வழி உறவு ஒன்றைக் காணலாம்.

இந்து ஆரிய மொழி வெளியிலிருந்து கொண்டு வரப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டது. அதனை மக்கள் ஏற்றுக்கொண்டனர். அவ்வாறு ஏற்றுக்கொள்வதில் சில நன்மைகள் இருப்பதை அவர்கள் கண்டனர் எனலாம். புதிதாக வந்த மொழி அதிகாரம் செலுத்தியோர் மொழியாக இருந்தமை அல்லது அம்மொழி தொழில்நுட்ப மாற்றத்துடன் தொடர்புடையதாய் இருந்தமை அல்லது சடங்குகளுக்குத் தேவைப்பட்ட மொழியாக இருந்தமை இந் நன்மைகளை வழங்கின எனலாம்.

வேதங்களின் மொழியாகிய சம்ஸ்கிருதமும் மாற்றங்களுக்கு உள்ளாகியது. மக்கள் பேசிய மொழிகளாகிய திராவிட மொழிகள் மற்றும் ஆஸ்திரோ - ஆசிய மொழிகள் ஆகியவற்றிலிருந்து கூறுகள் வேத சமஸ்கிருதத்தில் சேர்க்கப்பட்டன.

ஒரு காலகட்டத்தில் இரு மொழிகளைப் பலரும் பேசும் நிலை காணப்பட்டது என்று சிலர் கருதுவர். அப்பொழுது பல்வேறு சமூகங்களிடையே ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் பேசப்பட்டன. இப்படியான ஒரு நிலைமைக்குப் பதிலாக வேறொரு நிலைமை இருந்திருக்கலாம். இந்து -ஆரிய மொழிகள் அல்லாத முந்திய மொழிகள் கீழ்மட்ட மொழிகளாக வழங்கி, அவற்றின் கூறுகள் இந்து ஆரிய மொழிகளுக்குள் சேர்ந்திருக்கலாம். வேதங்களின் மொழி அன்று ஆதிக்கம் பெற்றிருந்த குழுவின் மொழி. அக்காலத்தில் வேறு மொழிகள் அங்கு பேசப்படவில்லை என்று பொருள் கொள்வது தவறு.

### இந்தியத் தாயகக் கருத்து

இந்து-ஐரோப்பிய மொழியின் தாயகம் வட இந்தியா எனக் கொள்வோரும் உளர். இக் கோட்பாடு இன்றைய இந்திய அரசியலுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ள ஒன்று. இக் கோட்பாட்டினை ஆதரிப்போரும் ரிக் வேதத்திலுள்ள சான்றுகளையே காட்டுகின்றனர். இந்திய அரசியலுடன் தொடர்பில்லாத வேறு அறிஞர்களும் இந்து-ஆரிய மொழி பேசுவோர் புலம்பெயர்ந்து வந்தமைக்கு ரிக் வேதத்தில் சான்றில்லை என்று கூறுவது கவனிக்கத்தக்கது.

இவ்வாறு இந்து-ஐரோப்பிய மொழிகள் இந்தியாவில் பரவியமை பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ள பலவகைப்பட்ட கருத்துக்கள் ரிக் வேதத்தையும் சிந்துவெளியிலும் வட இந்தியாவிலும் காணப்படும் தொல்லியல் சான்றுகளையும் பயன்படுத்தி முன்வைக்கப்பட்டுள்ளன. ஒரே சான்றின் அடிப்படையில் வெவ்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்படுவதை நோக்கினால், எந்த ஒரு கருத்துக்கும் திட்டவட்டமான சான்று இல்லை என்றுதோன்றுகிறது.

### தாய்மொழி மாற்றம்

மேலும் மேலும் புதிய தொல்லியல் சான்றுகள் வெளிப்பட ஒரு விஷயம் கூடுதலாக உறுதி பெறுகின்றது. அதாவது, நீண்டகாலமாக நம்பப்பட்டதற்கு மாறாக ஆரியர் என்ற ஒரு மக்கள் கூட்டம் இந்தியத் துணைக் கண்டத்துக்குப் படையெடுப்பு நடத்தியது என்று கொள்ள இடமில்லை. இந்து-ஐரோப்பிய மொழிகள் இந்தியத் துணைக் கண்டத்தில் நீண்டகாலமாகப் பரவிய பின்னரே பிராகிருத மொழிகள் தோன்றின. அவ்வாறு பரவிய காலத்தில் முன்னர் குடியேறியிருந்த பல்வேறு மக்கள் மத்தியில் அம் மொழிகள் பரவின. இறுதியில் இப் பழைய குடிகளின் மொழிகள் மறைய, இந்து ஐரோப்பிய (இந்து-ஆரிய) மொழிகளின் வழிந்த பிராகிருதங்கள் அவர்கள் தாய்மொழிகளாயின. இவ்வாறு தாய்மொழி மாற்றம் வட இந்தியாவில் ஏற்பட்டது. இந்து- ஆரிய மொழி பேசியோருக்குச் சாதகமாக இருந்த பல காரணிகள் இந் நிலையை உருவாக்க உதவின.

இந்து-ஐரோப்பிய மொழிகளின் தோற்றமும் பரம்பலும் தொடர்பான பிரச்சினைகள் இலகுவில் தீர்க்கப்படக் கூடியவை அல்ல. இவை பற்றிய கருத்து வேறுபாடுகள் புதிய சான்றுகள் கிடைக்கும் வரை நீடிக்கும் என்று கூறலாம்.

இந்து-ஐரோப்பிய மொழிகள் வட இந்தியாவைத் தாயகமாகக் கொண்டவை என்ற கருத்தோ வெளியிலிருந்து வந்தவை என்ற கருத்தோ இங்கு முக்கியமானது அன்று. இந்து-ஐரோப்பிய மொழிகள் வட இந்தியாவில் எழுச்சி பெற்ற பின் அல்லது பரவிய பின் நிகழ்ந்த வளர்ச்சிகளே இங்கு முக்கியமானவை.

### பிராகிருதங்களின் எழுச்சி

இந்து-ஐரோப்பியத்தின் ஒரு கிளை இந்து-ஆரியம். இந்தியாவில் மிகப் பழைய இந்து- ஐரோப்பிய மொழியாக அடையாளங் காணப்பட்டுள்ள சமஸ்கிருத மொழி இந்து-ஆரிய மொழிக் கிளையைச் சேர்ந்தது. வேத நூல்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சமஸ்கிருதம் இம் மொழியின் மிகப் பழைய வடிவம். இதனைப் பிற்பட்ட சமஸ்கிருத வடிவங்களிலிருந்து வேறுபடுத்துவதற்கு வேத சமஸ்கிருதம் என்பர். வேத சமஸ்கிருதமும் அதன் காலத்தில் பேசப்பட்ட பிற இந்து-ஆரிய மொழிப் பிரிவுகளும் பழைய இந்து- ஆரிய மொழிகள் எனப்படும்.

பழைய இந்து-ஆரிய மொழிகள் சில காலம் வட இந்தியாவில் வாழ்ந்த மக்கள் மத்தியில் வழங்கிய பின் அவற்றின் வழி வந்த மொழிகளாகப் பிராகிருதங்கள் எனப்படும் மொழிகள் தோன்றின. பழைய இந்து-ஆரிய மொழிகள், சமஸ்கிருதம் உட்பட, வழக்கற்று போயின. இப்பிராகிருதங்களை நடு இந்து-ஆரிய மொழிகள் என்பர். இம் மொழிகளும் வழக்கற்றுப் போக இன்று வட இந்தியாவில் பேசப்படும் மொழிகளாகிய ஹிந்தி, வங்காளி போன்ற மொழிகள் தோன்றின. இவற்றை நவீன இந்து -ஆரிய மொழிகள் என்பர்.

பேராசிரியர்
**கா. இந்திரபாலா**

பிராகிருத மொழிகள் வட இந்தியாவுக்கு வெளியே பரவிய வரலாறுதான் இந் நூலின் பொருளுக்குத் தொடர்புடைய விடயம். வட இந்தியாவில் பிராகிருத மொழிகளைப் பேசியோர் வெளியிலிருந்து புலம்பெயர்ந்து வந்தவரல்லர்.

அவர்கள் முன்னர் வட இந்தியாவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலந் தொட்டு வாழ்ந்த மக்களின் வழித்தோன்றல்கள். தென்னிந்தியா- இலங்கைப் பிராந்தியத்தில் ஆதி இரும்புக் காலத்தில் நிகழ்ந்த பிராகிருதங்களின் பரம்பல் தான் இந் நூலில் கூறப்படும் வரலாற்றுக்கு முக்கியமான ஒரு முன் னேற்ற நிகழ்ச்சியாக அமைகின்றது. (தொடரும்)

# சான்றாண்மை மிக்க மாணவர்களை உருவாக்கிய பொருளியல் பேராசிரியர் பாலகிருஷ்ணன்

**பொருளியல் பேராசிரியர் நாகலிங்கம் பாலகிருஷ்ணன் அவர்களின் சேவையைப் பாராட்டி 14.12.2008 அன்று அவரது மாணவர்களாலும், நண்பர்கள், நலன்விரும்பிகளால் எடுக்கப்பட்ட பெருவிழா கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.**

**அவரது சேவையின் மூலம் பல்கலைக்கழக சமூகமும் அவரது மாணவர்களும் தமிழ்ச் சமூகமும் பெரிதும் பயனடைந்துள்ளனர்.**

**இன்று உயர் பதவியில் இருக்கும் பலர் அவரிடம் பொருளியல் கற்றவர்கள். மாகாண நிர்வாக அலகின் மூத்த அதிகாரிகளும் மத்திய வங்கி, வணிக வங்கியின் மூத்த உத்தியோகத்தர்களும் யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, தென்கிழக்கு, பேராதனை, கொழும்புப் பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்களாகவும் சிரேஷ்ட விரிவுரையாளர்களாகவும் இருக்கின்றனர். இவரின் சேவை நயப்பு நாளன்று 26 ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்ட "பொருளாதார அபிவிருத்திச் செல்வழி" என்று நூல் வெளியிடப்பட்டுள்ளது. இதனையொட்டி பேராசிரியர் ப.சிவநாதன் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.**

**(ஆ-ர்)**

இலங்கையின் உயர்கல்வி மையமான பல்கலைக்கழக அமைப்பில், பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பேராசிரியர் நாகலிங்கம் பாலகிருஷ்ணன் அவர்கள் ஆற்றிய சிறந்த சேவைகளைப் பதிவு செய்துகொள்வதுடன் அவற்றினால் பல்கலைக்கழக சமூகம் அடைந்துள்ள நன்மைகளையும் பதிவு செய்வது மிகவும் அவசியமாகின்றது.

அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருந்த காலத்தில் அங்கு அவருடைய பொருளியல் மாணவனாக இருந்ததும், பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அவர் துறைத் தலைவராக இருந்த பொழுதில் அத் துறையில் நான் விரிவுரையாளராகப் பணியாற்றியதும், இரு முக்கிய கால கட்டங்களுக்கிடையேயும் அதற்குப் பின்னரும் அவரைப் பற்றிய தொழில்சார் சேவைகள் பற்றிய நினைவுகளை நன்றியறிதலுடன் எடுத்துக் கூறிவதில் மிக்க மகிழ்ச்சியடையவதுடன், இது எனக்குக் கிடைத்த ஒரு கௌரவமாகவும் கருதுகின்றேன்.

இரு காலகட்டங்களுக்கிடையே ஏறத்தாழ 25 வருடங்கள் அடங்கியுள்ளன. இக்காலப் பகுதியிலும் அதற்குப் பின்னரும் இலங்கையின் உயர்கல்வியில் - குறிப்பாக பல்கலைக்கழகக் கல்வியில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. அதிகமான மாணவர்கள் பல்கலைக்கழகக் கல்வியில் சேர்க்கப்பட்டனர். பெண்கள் கூடுதலாக உயர் கல்வியில் சேர்ந்தனர். புதிய பல்கலைக்கழகங்கள் பல ஆரம்பிக்கப்பட்டன.

அத்துடன், அரசியல் அழுத்தங்கள் காரணமாக பல்கலைக்கழகங்களில் ஸ்திரமற்ற நிலையும் அதிகம் காணப்பட்டது. பேராசிரியரின் பல்கலைக்கழக சேவை அறுபதுகளிலிருந்து நான்கு தசாப்த காலம் வரை நீடித்திருந்த சூழ்நிலையில் மேலே மிகச்

**சேவை நயப்பு 1**

சுருக்கமாகக் கூறப்பட்ட மாற்றங்கள் பல மேலும் கூடுதலான தாக்கத்துடன் அவருடைய சேவைக் காலத்தில் தொடர்ந்தன என்பதையும் அவதானிக்க முடிகின்றது.



யாழ்ப்பாணத்தின் வடமராட்சிப் பிரதேசத்தில், புலோலி தெற்கினைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மறைந்த நாகலிங்கம்-வள்ளியம்மை குடும்பத்தில் மூன்றாவது புதல்வராகப் பிறந்த இவர் ஆரம்ப நிலைக் கல்வியினை வீட்டுக்கு அருகாமையில் உள்ள புலோலி தெற்கு மெதடிஸ்த மிசன் பாடசாலையில் முடித்து, பின்னர் இரண்டாம் நிலைக் கல்வியினை அக்கால ஆங்கில மொழி மூலப் பாடசாலையான பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில், மறைந்த புகழ்பெற்ற பூரணம்பிள்ளை அதிபராக இருந்த காலத்தில் நிறைவு செய்தார். பின்பு, 1955 இல் பட்டப் படிப்பிற்காக பேராதனை இலங்கைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முதலாண்டு மேற்கத்தைய வரலாறு, பொருளியல் மற்றும் தமிழ் ஆகிய பாடங்களைக் கற்றுள்ளார்.

பின்னர் பொருளியலை சிறப்புப் பாடமாகக் கற்று, 1959 இல் பொருளியல் பட்டத்தினை விசேட சித்தியுடன் பெற்று வெளியேறினார். அதே ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறையில் உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்றார். இது அவரைப் பல்கலைக்கழக அமைப்புடன் இணைத்துக் கொள்வதற்கான முக்கியத்துவம் வாய்ந்த ஆரம்ப கட்டமாக அமைந்தது. அன்று தொடக்கம் பல்கலைக்கழகத்தில் அவ ருடைய தொழி ன்மை விருத்தி அவர் 2002 ஆம் ஆண்டு ஓய்வுபெறும் வரை நான்கு தசாப்தங்களுக்கு மேலாக நீடித்திருந்தது.

**பேராசிரியர் பசுபதி சிவநாதன்**
பொருளியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


பேராதனைப் பல்கலைக்கழ கத்தில் பொரு ளியல் கல்வி பயின்ற காலத்தில் அவருடைய ஆசிரியர்கள், பேராசிரியர் கள், மேன்மை கொண்ட புகழ் பெற்ற புலமையாளர்கள் ஆகி யோரிடமிருந்து வெவ் வேறு பாடங்களைக் கற்றார்.

இதில் மறைந்த Das Gupta, F. R.Jeyasuriya, H .A.de.S. Gunasekara, A.J.Wilson, Tawney Rajaratnam ஆகியோருடன் மற்றும் Dr.Ian Vanden Driesean, Dr.Victor Gunasekara, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பொருளியல் பேராசிரியர் A.D.V.des Indraratne பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பொருளியல் பேராசிரியர் Buddhadasa Hewavitharana என்பவர்களும் அடங்குவர். (தொடரும்)

# கார் திருடன் ஒருவன் ஆடாக மாறிய நிலையில் கைது

## நைஜீரியாவில் சம்பவம்

ஆயுதம் ஏந்தி கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட குற்றச் சாட்டில் ஆடொன்று கைது செய்யப்பட்ட விசித்திர சம்பவம் நைஜீ



ரியாவில் இடம்பெற்றுள்ளது.

பொலிஸாரின் கண்ணில்மண்ணைத் தூவும் வகையில், கார்த்திருடன் ஒருவனே தனது மந்திர வித்தைகளைப் பயன்படுத்தி இவ்வாறு ஆடாகமாறியுள்ளதாக நைஜீரிய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் கவாரா மாநில பொலிஸ் பேச்சாளர் ருன்ட் மொஹமட் 'ராய்ட்டர்' செய்திச் சேவைக்கு அளித்த பேட்டியில்,

“கிராம பாதுகாப்பு குழுவினரே இந்த ஆட்டை எம்மிடம் ஒப்படைத்துள்ளனர். அவர்கள் சென்று கொண்டிருந்த வழியில் கொள்ளையர்கள் சிலர் காரொன்றை திருட முயற்சிப்பதை கண்டதாகவும் அவர்களில் ஒருவன் தப்பிச்சென்றுவிட பிறிதொருவன்ஆடாகமாறிய தாகவும் அவர்கள் எம்மிடம் தெரிவித்தனர். அவர்கள் கூறியது உண்மையான தகவலா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. எனினும் ஆட்டை தொடர்ந்து தடுப்புக் காவலில் வைத்துள்ளோம்”என்று கூறினார்.

“மந்திர வித்தை தொடர்பான தகவல்கள் அடிப்படையில் நாம் விசாரணைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. மனிதன் ஆடாக மாறியமை சம்பந்தமாக விஞ்ஞான பூர்வமாக நிருபிக்க வேண்டியுள்ளது. ” என அவர் மேலும் தெரிவித்தார்.

ஆபிரிக்காவின் அதிக சனத்தொகை கொண்டநாடானநைஜீரியாவின்பலபகுதிகளில், மந்திரவித்தைகள் தொடர்பில் பெரிதும் நம்பிக்கை நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கார் திருடன் ஒருவன் ஆடாக மாறியிருப்பதைக் கேள்விப்பட்டு அந்த விசித்திர ஆட்டைப் பார்க்க பொலிஸ் நிலையத்தை பெருந்தொகையான மக்கள் முற்றுகையிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# தமிழினப் படுகொலையை கண்டித்து மொன்றியலில் கவனயீர்ப்பு

(மொன்றியல்)

இலங்கை அரசு மேற் கொண்டுவரும் தமிழ் இனப் படுகொலையை சர்வதேசத்திற்கு அம்பலப்படுத்தும் முகமாக ஞாயிற்றுக் கிழமை மாலை 3.00 மணிமுதல் 5மணி வரை மொன்றியல் பீனெவ் , ஜென்தலோன் சந்திப்பில் கவனயீர்ப்பு நிகழ்வொன்று இடம் பெற்றது.

கால நிலை குளிராக இருந்த போதும் வீதியோரத்தில் நின்ற மக்கள் தமிழ் இனப் படுகொலையை தடுத்து நிறுத்தக் கோரும்



வாசகங்களையும் படு கொலைச் சாட்சியமாக காணப்படும் ஒளிப்படங்களையும் உள்ளடக்கிய பதாகைகளை ஏந்திய வண்ணமிருந்தனர்.

அத்துடன் ஆங்கில மற்றும் பிரெஞ்சு மொழிகளில் அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களையும் அவ்வழியால் சென்ற வேற்று இன மக்களுக்கு வழங்கினர். (ஓ-6)

# ஸ்பெயின், பிரான்ஸை உலுக்கிய சூறாவளி 4 சிறுவர்கள் உட்பட 17 பேர் பலி

ஸ்பெயின்,பிரான்ஸ் ஆகிய ஐரோப்பிய நாடுகளைத் தாக்கிய சூறாவளி காரணமாக, 4 சிறுவர்கள் உட்பட 17 பேர் பலியாகியுள் ளனர்.



பார்சிலோனாவின் அருகே விளையாட்டு மண்டபம் ஒன்றின் கூரை இடிந்து விழுந்ததில் 9 வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்ட மேற்படி 4 சிறுவர்களும் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் புயல் காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களால் பல்வேறு இடங்களிலும் மொத்தம் 17 பேர் உயிரிழந்தனர். இச்சூறாவளி காரணமாக பிரான்ஸில் 1.5 மில்லியன் மக்களும் ஸ்பெயினில் பல்லாயிரக் கணக்கான மக்களும் மின்சாரம் இன்றி இருளில் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். (ஓ-6)

# அமெரிக்கப் படைகள் பொதுமக்களை கொன்றுள்ளதாக ஆப்கான் அதிபர் குற்றச்சாட்டு

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையிலான படைகள் பொதுமக்களை கொன்றுள்ளதாகக் கூறியுள்ள ஆப்கானிஸ்தான் அதிபர் ஹமீது கர்சாய் இச்சம்பவத்தை கண்டித்துள்ளார்.

காபூலின் வடக்கிழக்கில் உள்ள லக்மான் பிராந்தியத்தில் தலிபான்களை குறிவைத்து நடத்திய தாக்குதலில் பதினைந்து தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக சனிக்கிழமையன்று அமெரிக்க இராணுவம் கூறியது.

ஆனால் பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட பதினாறு பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக ஆப்கானிஸ்தான் அதிபர் அலுவலகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. இது போன்ற சம்பவங்கள் அரசாங்கத்தை பலவீனமாக்கி தீவிரவாதிகளை பலமாக்கி விடும் என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக ஆப்கான் அமெரிக்க கூட்டு விசாரணை நடைபெறவுள்ளது. (ஓ-6)

## தொட்டால் ... தலை சிலிர்க்கும்!

ஜேர்மனியில் நடைபெறும் மின் சக்தி தொடர்பான மூன்று நாள் கண்காட்சியில் வான் டி கிராப் ஜெனரேட்டர் எனப்படும் பந்து வடிவ இலகு மின்சாதனத்தைத் தொடு



கிறார்.ஒரு மொடலழகி மின்சாரம் பாய்ந்ததும் தலை முடி சிலிர்த்தெழுகிறது.

மின் சக்தியின் பல்வேறு பரிமாணங்களை விளக்கும் இந்தக் கண்காட்சியில் மின் விநியோகம் ,மின் சேவை மின் நிலையங்கள், பொறியியல், வளங்குன்றா மின் உற்பத்தி, மின் கட்டுப்பாட்டு தொழில் நுட்பம் போன்ற மின் துறை தொடர்பான அரிய விஷயங்கள் இடம் பெற்றுள்ளன.

## கட்டடத்தில் ஏறும் கப்பல்



மானம் கப்பல் ஏறுது என்று நாம் சொல்வது உண்டு. ஆனால் இங்கு கப்பலே கட்டிடத்தில் ஏறுகிறது. பிரான்ஸின் சுற்றுலா கப்பல் நோர்வே .இதன் பழைய பெயர் பிரான்ஸ்.

இதன் 500க்கும் மேற்பட்ட பல்வேறு பகுதிகள்தனித்தனியாக பிரிக்கப்பட்டு பெப்ரவரி 8ஆம், 9ஆம் திகதிகளில் ஏலம் விடப்பட உள்ளன. அதன் ஒருபகுதியான முன் பகுதி தான் இது. பாரிசில் உள்ள டாஸால்ட் ஹோட்டல் கட்டிடத்தின் மீது கிரேன் உதவியுடன் ஏற்றப்படுகிறது. (ஓ-6)

# கணனி தொழில்நுட்ப பயிற்சியைப் பெற்றுள்ள விழிப்புலனற்ற மாணவர்கள்

விழிப்புலன் இழந்தவர்கள் கணனிப் பயிற்சி பெற்று சாதனையாளர்களாக உருவாக்கப்பட்டுள்ளார்கள். 6 மாத பயிற்சியை மேற் கொண்ட இவர்கள் பயிற்சிகளை வழிப் புலனற்ற செல்வி க. நகுலாம்பிகை மூலமாக பெற்றார்கள். கணனியில் இக் கற்கை நெறிக்கு வடக்கு மாகாண சமூக நலத்துறை திணைக்களம் நிக்கொட் நிறுவனம் மூலமாக நிதியுதவியை பெற்றுக் கொண்டது. இப் பயிற்சி நெறியானது யாழ். மாவட்ட சமூக நலத்துறை திணைக்களம் நிக்கொட் நிறுவனத்தடன் இணைந்து யாழ். உள்ளூ ராட்சி உதவி ஆணையாளர் பணிமனை கேட்போர் கூடத்தில் நடாத்தி முடிக்கப்பட்டுள்ளது. கணனித்துறையில் பாகுபாடின்றி இவர்களையும் பயன்படுத்திக் கொள்வதற்கு களம் அமைப்பது இதன் நோக்கமாகும்.

இக் கற்கை நெறியானது 17 பார்வையற்றவர்களை தன்னார்வத்துடன் தலை நிமிரச் செய்துள்ளது. ஒலிச் சமிக்ஞைகள் மூலமாக கணனிகளை கையாளும் திறமை வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. இதில் பங்கேற்ற 50% மான மாணவர்கள் பல்கலைக் கழகங்களில் பயில்பவர்கள். எனவே உயர் கல்வி பெறும் இவர்களால் கணனி பயன்பாடு எதிர்காலத்தில் நிச்சயம் முன்னெடுக்கப்படும் என்பது முக்கியமான விடயமாகும்.அடுத்ததாக மீதமுள்ளவர்கள் தொடர் கணனி பயிற்சியை முன்னெடுக்க உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை திட்டத்தின் வெற்றிக்கு உறுதுணையான அம்சமாகும்.

சமூகத்தில் பாகுபாடின்றி மாற்று வலுவுள்ளவர்களும் சாதனை படைக்கக்கூடியவர்கள் என்பதற்கு இந் நிகழ்வு சான்று பகர்கிறது. சமூகத்தின் ஊடாட்டம் மூலம் இவர்களுக்கு வாய்ப்பளிப்பது எமது சமூகக் கடமையாகும்.

எனவே கணனித் துறை வளர்ச்சியில் ஆர்வமுள்ள சமூக மேம்பாட்டாளர்கள் வாய்ப்புக்களை இவர்களுக்கு வழங்குவார்களா? இதன் மூலம் இத்துறை சார்ந்தவர்கள் சிந்தித்து செயற்படுவதற்கு முயன்று உதவுவது கௌரவமான சமூக வளர்ச்சிக்கு வழி வகுக்கும் என்பதை அனைவரும் எண்ணிப் பார்க்க முயல்வது இன்றைய தேவையாகவுள்ளது.

கணனி என்பது வாழ்வில் பின்னிப் பிணைந்த ஒன்றாகிய இன்றைய நிலையில் விழிப்புலனற்றவர்களும் இத்துறையில் பிரகாசித்து முத்திரை பதிக்கும் நிகழ்விற்கு முன்னுதாரணமாக விளங்கும் நிலை யாழ். மாவட்



டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவர்களை பயன்படுத்தும் நிலையை சமூக ஆர்வலர்கள் ஏற்படுத்துவது இன்றியமையாத மனிதாபிமான தேவையாகவுள்ளது. கணனிகளை செம்மையாக இயக்குவது. மட்டுமல்லாது. தாம் பிரசவித்த கணனி செயற்பாடுகளைச் சரி பார்க்கும் திறன்களையும் இவர்கள் பெற்றுள்ளார்கள்.

இந்நிகழ்வை மதிப்பு மிக்கதாகவும், வினைத்திறன் மிக்கதாகவும் மாற்றுவது 17 பேரும் கணனித் துறையில் மிளிருவதைப் பொறுத்து அமைந்துள்ள வேளையில் இவர்களுக்கான வாய்ப்பை வழங்குவதற்கு பலர் முன்வர வேண்டும் .இதன் வாயிலாகமாற்று வலுவுள்ளவர்களின் மனநிலை மேம்பாடு அடையும் , சமூக ஒன்றிணைப்பும் ஏற்படும். இந்த விடயத்தைதெரிந்து கொள்ளும் ஒவ்வொருவரும் வாய்ப்பளிக்கவும், உதவவும் தயாராக வேண்டும். மேலும் இதற்காக யாழ். மாவட்ட சமூக நலத்துறை திணைக்களம் மூலம் பயிலுனர்களின் விபரங்களை அறிந்து உதவ முடியும்.

பயிற்சி பெற்றவர்கள் ஒவ்வொருவரும் இத் துறையில் ஈடுபடுத்தப்பட்டு முன்னேறும் ஆர்வலர்களாக உள்ளார்கள். இதேபோன்ற மாற்றுவலுவுள்ளவர்கள் சமுதாயத்தில் வைத்தே சாதனையாளர்களாக மாற்றப்பட வேண்டும். ஒவ்வொரு மாற்றாற்றல் உள்ளவரும் தனது ஒத்த வயதினர் செய்யும் சாதாரண

த.கிருபாகரன்
மாவட்ட இணைப்பாளர்
சமூகநலத்துறை திணைக்களம்
மாவட்ட அலுவலகம்,யாழ்ப்பாணம்

கடமைகளை செய்ய பயிற்றுவிக்கப்பட வேண்டும். இந்த அடிப்படை எண்ணக் கரு சற்று விசாலமாகி தொழில்நுட்பத்துறையின்வளர்ச்சியில் கணனி மயமாக்கலில் ஈடுபடுத்தப் பட்டுள்ளமை மனிதாபிமான சமூக வலுவூட்டல் செயலாகும். இது போன்ற எதிர்கால செயற்பாடுகள் மக்களுக்கான சமூக சேவையை தரமானதாகவும், பலமான தாகவும் ஆக்கும் என்பதில் எவ்வித ஐயப்பாடு மில்லை. சமூக மேம்பாட்டுக்காக நாம்ஒவ்வொருவரும்உரமான சிந்தனைகளால் மாற்று ஆற்றல் உள்ளவர்களுக்காக ஆக்க பூர்வமான செயற்பாடுகளுக்கு வாய்ப் பளித்து செயற்படுத்த தலைப்படுவது எம் ஒவ்வொருவரின் சமூகக் கடமையாகும்.

# போரை இயக்கி தமிழினத்தை வேரறுக்க இந்திய அரசு திட்டம்

## வைகோ சீற்றம்

(சென்னை)

தமிழர்களை அழிக்க சிங்களஅரசாங்கம்



நடத்தும் இனப்படுகொலையை இந்திய அரசாங்கம் தான் தேவையான அனைத்தையும் வழங்கி இயக்கி வருகின்றது. இந்திய மத்திய அரசாங்கம் -தற்போது இறுதிக்கட்டமாக- தமிழ் இனத்தை வேரறுப்பதற்காக தமிழீழ விடுதலைப்புலிகளை அழிக்கும் திட்டத்தை அரங்கேற்றுகின்றது என்று மறுமலர்ச்சி ம.தி.மு. க. பொதுச் செயளாலர் வைகோ. சீற்றம் வெளியிட்டுள்ளார்.

ஊடகவியலாளர்களுக்கு நேற்று முன்தினம் வைகோ அளித்த பேட்டியின் போது மேலும் தெரிவித்துள்ளதாவது ,

ஈழத்தமிழர்களை அழிக்கும் சிங்கள அரசாங்கம் நடத்தும் இனப்படுகொலைக்கு இந்திய அரசாங்கம் ஆயுதப் பயிற்சி மற்றும் நிதி உதவி உட்பட தேவையானவற்றை வழங்கி இயக்கி வருகின்றது.

மத்திய அரசாங்கம் தற்போது இறுதிக்கட்டமாக தமிழ் இனத்தை வேரறுக்க விடுதலைப்புலிகளை அழித்து திட்டத்தை அரங்கேற்ற முனைந்துள்ளது.

விடுதலைப்புலிகளை போரில் வெல்ல யாராலும் முடியாது. மேலும் மேலும் வெல்வார்கள். 50 ஆண்டுகளாகப் போராடி வரும் தமிழர்களுக்கு நாம் ஆதரவளிக்க வேண்டும்.

சிங்கள இராணுவத்திடம் இழந்த யாழ்ப்பாணத்தை விடுதலைப்புலிகள் மீண்டும் விரைவில் மீட்பார்கள். முதலமைச்சர் கருணாநிதி இலங்கைத் தமிழர்களுக்காக நாடாளுமன்ற உறுப்பினர்களை பதவி விலகுவோம் என்று கூறினார். பின்னர் பதவியைத் துறக்க தயார் என்று கூறினார்.

இப்போது ஆட்சியை இலக்கத் தயார் என்று நாடகம் நடத்தி வருகிறார்.

தமிழர்களுக்கு எதிராக செயற்படும் மத்திய அரசாங்கத்திற்கு கருணா நிதி துணை நிற்பது தமிழர்களுக்குச் செய்யும் துரோகம் ஆகும்.

ஈழப்போரில் தமிழர்கள் வெற்றி பெறுவார்கள். ஈழத்தமிழர்களுக்காக மாணவர்கள் போராட்டம் நடத்தி இருப்பது இருட்டில் வெளிச்சமாகவுள்ளது.

எந்தக்கட்சியின் தூண்டுதலும் இல்லா மல் மாணவர்கள் போராட்டத்தை தொடங்கியுள்ளனர்.இந்தப் போராட்டத்தை மாணவர்கள் தீவிரப்படுத்த வேண்டும்.

ஏனெனில் 1942ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்திலும் ,1965ஆம் ஆண்டு மொழிப் போராட்டத்திலும் மாணவர்கள் உறுதுணையாக இருந்துள்ளனர்.

ஈழத்தமிழர்களுக்கு இந்தப் போராட்டத்தின் மூலம் நிம்மதி கிடைத்துள்ளது. ஈழத் தமிழர்களுக்கு அனைத்துத் தமிழர்களும் உதவ முன்வரவேண்டும்.

எதிர்வரும் 12ஆம் திகதி புதுடில்லியில் ம.தி.மு.க. சார்பில் உண்ணா நிலைப் போராட்டம் நடைபெறவுள்ளது என்றார்.(ஓ-6)

# தனுஷ்கோடி கடல் மணல் திட்டில் நின்ற இலங்கைப்படகு குறித்து விசாரணை


(இராமேஸ்வரம்)

தனுஷ்கோடி கடல் மணல் திட்டில் நின்ற இலங்கை படகு குறித்து புலனாய்வுத் துறையினர் விசாரித்து வருகின்றனர். இராமேஸ்வரம் சேரான் கோட்டை கடற்கரையில் கடந்த சனிக்கிழமை 25 குதிரை சக்தி என்ஜின் பொருத்தப்பட்ட நிலையில் இலங்கை பைபர் படகு ஒன்று நின்றது.

இலங்கை நாச்சிக்குடா பகுதியில் முகாமிட்டுள்ள கடல் புலிகள் பலர் இந்த படகில் வந்திருக்கலாம் என்பதால் புலனாய்வுத்துறையினர் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

இந் நிலையில் நேற்று முன்தினம் தனுஷ்கோடி கடல் மூன்றாம் மணல் திட்டில் இலங்கை படகு ஒன்று நிற்பதாக மீனவர்கள் தகவல் கொடுத்தனர்.

இதைத் தொடர்ந்து இந்திய கடலோரக் காவல் படையினர் நேற்று முன்தினம் இரவு மணல் திட்டில் நின்ற படகை கைப்பற்றி மண்



டபம் தெற்கு கடற்கரைக்கு கொண்டு சென்றனர். பொலிஸார், புலனாய்வுத் துறையினர் படகைபார்வையிட்டு விசாரித்து வருகின்றனர்.

இராமேஸ்வரம் கடல் பகுதியில் இந்திய கடற்படையினரின் கண்காணிப்பை மீறி அடுத்தடுத்து படகுகள் வருவதால், பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-6)

## சாதனை படைத்தவர்களுக்கு 'பத்ம' விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன



(புதுடில்லி)

பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு வழங்கப்படும் 'பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அணு விஞ்ஞானி அனில் ககோட்கர், ஐ.எஸ். ஆர்.ஓ. , தலைவர் மாதவன் நாயருக்கு பத்ம விபூஷண் விருதும், பிரபல தமிழ் எழுத்தாளர் ஜெயகாந்தனுக்கு 'பத்ம பூஷண்' விருதும் கிடைத் திருக்கிறது. பத்மஸ்ரீ விருது பெறுபவர்களில் தமிழகத்தைச் சேர்ந்த அறிஞர் ஐராவதம் மகாதேவன், இசைக் கலைஞர் அருணா சாய் ராம், நகைச்சுவை நடிகர் விவேக் அடங்குவர்.

மத்திய அரசு 'பத்ம விபூஷண்' , பத்ம பூஷண் 'பத்ம ஸ்ரீ' விருதுகளை அறிவித்துள்ளது. 10 பேருக்கு 'பத்ம விபூஷண்' விருதும், 30 பேருக்கு 'பத்ம பூஷண்' விருதும் 93 பேருக்கு 'பத்ம ஸ்ரீ' விரு தும் தரப்படுகின்றன. இதற்கான அறிவிப்பை இந்திய ஜனாதிபதி பிரதிபா பட்டேல் நேற்று முன்தினம் வெளியிட்டார். (ஓ-6)

## பாரதச் செய்திகள்

# தமிழீழத்தை அங்கீகரிக்கும் படி மத்திய அரசை தமிழக அரசியல் கட்சிகள் நிர்ப்பந்திக்க வேண்டும்

## டாக்டர் இராமதாஸ் வலியுறுத்தல்

(சென்னை)

ஈழத் தமிழர்களுக்கு தனி ஈழம் என்ற நிலைப்பாட்டை அங்கீகாரம் செய்ய வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் நிர்ப்பந்தம் செய்ய வேண்டும் என்று டாக்டர் இராமதாஸ் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களுக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சென்னையில் நடைபெற்ற ஒரு விழாவில் தமிழக முதலமைச்சர் இலங்கைத் தமிழர்களை காப்பாற்ற முடியாமல் இருக்கிறதே என்று பேசினார்.

மத்திய அரசாங்கத்தை நீங்கள் நிர்ப்பந்தம் செய்து போர் நிறுத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். பெப்ரவரி 15 ஆம் நாள், தி.மு.க. பொதுக்குழு கூட்டி முடிவெடுக்க உள்ளதாக அறிவித்துள்ளீர்கள்.

இடைப்பட்ட 3 வாரத்தில் இலங்கையில் தமிழர்கள் என்னென்ன இன்னல்களுக்கு ஆளாக போகிறார்களோ? ஏன் இந்த தாமதம். கலைஞர் உடனடியாக சில முடிவுகளை எடுக்க வேண்டும். நமது வேண்டுகோள் வேறு விதமாக இருக்க வேண்டும்.

மத்திய அரசாங்கத்திடம் போர் நிறுத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுப்பதற்கு பதிலாக ஈழத் தமிழர்களுக்கு தனி ஈழம் என்ற நிலைப்பாட்டை அங்கீகாரம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்த வேண்டும்.

இது தி.மு.க. விற்கு புதிதல்ல. தனி ஈழம் தான் இலங்கை இனச்சிக்கலுக்கு தீர்வு என்று ஏற்கனவே தி.மு.க அறிவித்து பல மாநாடுகள், பேரணிகள், நடத்தி இருக்கிறது. அந்த பழைய நிலைப்பாட்டையே தி.மு.க மீண்டும் மேற்கொள்ள வேண்டும். அப்போது தான் நாம் எதிர்பார்க்கும் தீர்வு கிடைக்கும்.

இத்தகைய முடிவை தான் தி.மு.க. பொதுக் குழுவிலும் மேற்கொள்ள வேண்டும். ஒன்றுபட்ட இலங்கையில் அந்த நாட்டின் அரசியல் சட்டத்திற்குட்பட்டு தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்பதெல்லாம் சாத்தியமே இல்லை.

ஏனெனில், இலங்கை அரசியல் சட்டத்தில் மாநிலங்களை கொண்ட கூட்டாட்சி என்பது இடம் பெறவில்லை.

1948 ஆம் ஆண்டு முதல் இன்று வரை



இலங்கை தமிழர்களுக்கு நியாயமான உரிமைகள் வழங்கப்பட வேண் டும் என்பதை சிங்களவர்கள் ஒருவர் கூட ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை.

தமிழர்களுக்கு சிறிதளவாவது அதிகாரம் வழங்கலாம் என்ற வகையில் அரசியல் சட்டம் திருத்தப்பட்ட போதெல்லாம் அடுத்து வந்த ஆட்சியாளர்களால் தூக்கி எறியப்பட்டுள்ளது.

எனவே ஒன்றுபட்ட இலங்கையில் அந்த நாட்டின் அரசியல் சட்டத்திற்குட்பட்டு தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கோரிக்கை அர்த்தமற்றது.

இப்படி கூறுகின்ற அமைப்புகளோடு நேருக்கு நேர் விவாதிக்க தயார். இதர கட்சிகளும் இதனை உணர வேண்டும். இலங்கை ஒரு வித்தியாசமான நாடு அந்த நாட்டின் வரலாற்றை புரட்டிப் பார்த்தால் தனி ஈழம் கோரிக்கை நியாயமானது என்பது தெரிய வரும்.

இந்தியாவில் வேறொரு இனத்தை சேர்ந்தவர்கள் அண்டை நாட்டில் பாதிக்கப்பட்டால் இந்தியா தலையிட்டு தனி நாடு உருவாக்கி தந்திருக்கும். உதாரணத்திற்கு கிழக்கு பாகிஸ்தான் பகுதியில் பங்களாதேஷ் என்ற நாடு உருவாக இந்தியா தான் காரணம்.

எனவே, அந்த நிலையை எடுக்க தமிழகத்தில் உள்ள கட்சி அமைப்புகள் ஒருங்கிணைந்து மத்திய அரசை நிர்ப்பந்தம் செய்ய வேண்டும். இதற்கு தமிழர்கள் முழு ஆதரவு தரவேண்டும் என்றார் அவர். (ஓ-6)

# இலங்கைப் பிரச்சினையை சுமுகமாக பேசித் தீர்க்க வேண்டும்

## காங்கிரஸ் முன்னாள் தலைவர் பேட்டி

இலங்கை பிரச்சினையை சுமுகமாகப் பேசித் தீர்க்க வேண்டும் என காங்கிரஸ் முன்னாள் மாநிலத் தலைவர் கிருஸ்ணசாமி கூறினார்.

இது குறித்து கடலூரில் அவர் கூறியதாவது இலங்கைத் தமிழர்களின் நலன், பாதுகாப்பில் மற்றவர்களை விட காங்கிரஸ் கட்சிக்கு அதிக அக்கறையுள்ளது.

பாதித்த மக்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் மூலம் உதவி செய்யப்படுகிறது. இப்போதுள்ள தலைமுறையில் தமிழினத்தைக் காப்பாற்ற முதல்வர் கருணாநிதியை விட ஒருவர் இருக்க முடியாது. அவர் இரத்தத்தில் தமிழ் உணர்வு ஊறியிருக்கிறது. இரண்டு நாட்டிற்கும் இடையே உள்ள பிரச்சினையை சுமுகமாக பேசித் தீர்க்க வேண்டும் என முதல்வர் கருணா நிதி அறிவார் .

மத்திய அரசு குறிப்பாக காங்கிரஸ் கட்சியும் அறியும்.

சில கட்சிகள் காழ்புணர்ச்சியோடு காங்கிரஸ் கட்சியையும் முதல்வர் கருணாநிதியையும் வேண்டும் என்று குறை கூறுகின்றனர்.


இரண்டு நாட்களுக்கு முன் சட்ட சபையில் இலங்கை தமிழர்கள் பிரச்சினை தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கைப் பிரச்சினையில் தமிழர்களைக் காப்பாற்றுவதில் காங்கிரஸ் முனைப்போடு உள்ளது.

அத்துடன் இந்திய மீனவர்கள் பிரச்சினையில் இலங்கை அரசைக் கண்டிக்க வேண்டும். இலங்கை அரசு செவி சாய்க்கா விட்டால் இந்திய அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை இராணுவத்திற்கு இந்திய வீரர்களின் உதவி என்ற பேச்சுக்கே இடமில்லை என்றார். (ஓ-6)

# சைனஸை அடியோடு அழிக்கும் அதி நவீன சிகிச்சைகள்...!



இன்றைய விஞ்ஞான முன்னேற்றத்தால் மருத்துவத்தில் சைனஸ் தொல்லைக்கு உடனடி தீர்வு காணலாம். இந்தப் பிரச்சினையால் தொடர்ந்து அவதிப்படுவோர் 'எண்டோஸ் கோப்பிக்', 'லேசர்', 'மைக்ரோ டிப்ரைபர்' போன்ற லேட்டஸ்ட் கருவிகள் மூலம் சிகிச்சை பெற்று எளிதில் குணமடையலாம். பழைய காலத்து சிகிச்சை முறையில் தற்காலிக நிவாரணம் தான் கிடைக்கும். இன்றைய அதி நவீன சிகிச்சைகளால் முழுமையான, நிரந்தரமான சுகம் பெறலாம். சைனஸுக்கு எண்டோஸ் கோப்பிக் சிகிச்சை.

இந்த சைனஸுக்கு வித்திடுவதே ஜலதோஷம்தான். நம்மில் யாராக இருந்தாலும் ஜலதோஷத்திலிருந்து தப்பவே முடியாது. ஆண்டுக்கு ஒரு முறையாவது அவஸ்தைப்பட்டே ஆக வேண்டும். "மூக்குள்ள வரை சளி இருக்கும்" என்று சும்மாவா சொன்னார்கள். சிலருக்கு மழைக்காலம் மட்டுமல்ல, எந்தக் காலத்திலும் அடிக்கடி ஜலதோஷம் பிடிக்கும். ஜலதோஷம் என்பது வைரஸ் அல்லது கிருமிகள் தாக்குதல். இதனால் உண்டாகும் தலைவலி, காய்ச்சல், மூக்கடைப்பு போன்றவற்றைக் கட்டுபடுத்தினாலே ஜலதோஷம் கட்டுப்பட்ட மாதிரியிருக்கும். இந்த ஜலதோஷம் மூன்று நாளிலோ அல்லது அதிகபட்சம் இரண்டு வாரத்திலோ குணமடைந்து விடும். இந்தக் குறிப்பிட்ட காலம் கடந்தும் அது குணமாகவில்லை என்றால் சைன்ஸுக்கு வழி வகுக்கிறது என்று தீர்மானிக்கலாம்.

மூக்கைச் சுற்றியுள்ள முக்கிய பாகங்களை சைனஸ் அறைகள் என்று சொல்கிறோம். அதாவது புருவத்துக்கு மேல் உள்ள நெற்றியில் பிரன்ட்ஸ் சைனஸ் அறைகளும், அதற்கு சற்று கீழே எத்மாய்டு சைனஸ் அறைகளும், மூக்குக்குப் பின்னால் ஸ்பீனாய்டு சைனஸ் அறைகளும், மூக்கின் இரு புறமும் கன்னத்தில் மேக்ஸிலரி சைனஸ் அறைகளும் இருக்கின்றன.

இந்த அறைகள் காற்றால் நிரப்பப்பட்டிருக்கும். இவை கிருமி தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்படும் போதுதான் நோயாக மாறுகிறது.

இவற்றில் ஏதேனும் ஓர் அறையில் நீர் அல்லது சளி போய் தங்கிய பிறகு சில காரணங்களால் அந்த அறைவாசல் அடைத்துக் கொண்டால் தொந்தரவுகள் அதிகமாகிவிடும். இந்த அடைப்புக்கு பல காரணங்கள் இருக்கின்றன. மூக்கின் நடுவில் இருக்க வேண்டிய தடுப்புச் சுவர் சிலருக்கு சற்று வளைந்து இருக்கும். இதனால், சைனஸ் அறைக்குள் காற்று சென்று வருவதில் தடை ஏற்படும். இரண்டாவது காரணம், அந்த அறை வாசலில் உருவாகும் சதை வளர்ச்சி. இது பாலிப் என்று அழைக்கப்படுகிறது.

**சைனஸ் அறைகளில் ஏதேனும் ஒன்றில் பாதிப்பு ஏற்பட்டாலும் அதை முற்றிலுமாக குணப்படுத்தி விட வேண்டும்**

மூன்றாவதாக தூசுகள், வேதிப் பொருட்கள் நிரம்பிய இடங்களில் வேலை பார்த்தால் அவை மூக்கினுள் போய் பிரச்சினையை உண்டு பண்ணும். குழந்தைகளுக்கு அடினாய்டு சதை வளர்வது இன்னொரு காரணம்.


இதைக் கண்டு கொள்ளாவிட்டால் கிருமிகள் கலந்த சளி சைனஸ் அறைக்குள்ளேயே தேங்கி, நாளடைவில் அது சீழாக மாறிவிடும். இது சைனஸ் புற்றுநோய் மற்றும் மூளை உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்குக் காரணமாகி விடும்.

இதற்கு உடனே சிகிச்சை அளிக்க வேண்டும். பழைய சிகிச்சை பலன் இல்லை. சைனஸில் தேங்கியுள்ள நீரை வெளியேற்ற பல ஆண்டுகளாக 'பஞ்சர்' என்ற சிகிச்சை முறை பின்பற்றப்பட்டது. மூக்கு அருகே ஊசி போட்டு அந்த நீரை உறிஞ்சி எடுப்பார்கள். இந்தச் சிகிச்சையால் தற்காலிக நிவாரணமே பெற முடியும். அதேசமயம் அனைத்து சைனஸ் அறைகளுக்கும் இந்தச் சிகிச்சை அளிக்க முடியாது. இப்போதெல்லாம் பஞ்சர் முறை சிகிச்சை நடைமுறையில் இல்லை.

சைனஸ் அறைகளில் ஏதேனும் ஒன்றில் பாதிப்பு ஏற்பட்டாலும் அதை முற்றிலுமாக குணப்படுத்தியாக வேண்டும். இதற்கு உதவுவது தான் 'எண் டோஸ் கோப்பி கமிரா பொருத்தப்பட்ட இந்தக் கருவி மூலம் வீடியோ திரையில் மூக்கின் அனைத்து பாகங்களையும் தெளிவாகப் பார்க்க முடியும். சைனஸ் அறைகளிலுள்ள சிறிய பாதிப்புக்களைக் கூட மிகத் துல்லியமாகக் காட்டி விடும். நோயின் தன்மையை அறிய நோயாளிகளுக்கு மயக்க மருந்து கொடுக்காமலேயே பரிசோதிக்க முடியும். மருத்துவமனையில் ஒருநாள் மட்டும் தங்கினாலே போதும். மூக்குத் துவாரத்தின் வழியே நுண்ணிய கம்பி போன்ற கருவி மூலம் சிகிச்சை அளிக்கப்படுவதால் அதில் காயமோ, தழும்புகளோ ஏற்படாது. எண்டோஸ் கோப்பி மூலம் சிகிச்சை பெறுபவர்களுக்கு மீண்டும் சைனஸ் பிரச்சினை வருவதில்லை. 'லேசர் கருவி' உதவியுடன் எண்டோஸ் கோப்பிக் அறுவை சிகிச்சை செய்வது மேலும் வசதியானது. இதனால், இரத்தம் அதிக அளவு வெளியேறுவது தடுக்கப்படுகிறது.

பெரிய காயம் எதுவும் ஏற்படாது. இப்போது இன்னும் லேட்டஸ்டான "மைக்ரோ டிப்ரைடர்" என்னும் கருவி வந்துள்ளது. நீண்ட கம்பி போன்ற இந்தக் கருவிக்குள் மிகச் சிறிய பிளேடுகள் பொருத்தப்பட்டிருக்கும். மூக்கின் ஒரு துவாரத்தின் வழியாக எண்டோஸ் கோப்பியையும் இன்னொரு துவாரத்தின் வழியாக மைக்ரோ டிப்ரைடரையும் செலுத்த வேண்டும். சைனஸ் அறைக்குள் உள்ள சீழ் கட்டியை வீடியோ திரையில் பார்த்து அகற்றி விடலாம். இந்தக் கருவியிலுள்ள பிளேடுகள் சுழன்று சதையை கட் பண்ணிக் கொண்டே நீரை உறிஞ்சி விடும். இப்படி கட்பண்ணும்போது சதைகள் ஒன்றுக் கொன்று ஒட்டிக் கொள்ளாது. இது மிகவும் நுட்பமான சிகிச்சை என்பதால் பாதுகாப்பானதும் பின் விளைவுகள் இருக்காது. குறிப்பாக பாலிப் சதையை அகற்றுவதற்கு இந்த மைக்ரோ டிப்ரைடர் கருவிதான் சிறந்தது. இவை இந்த நூற்றாண்டில் நமக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம்.

# முகத்தில் கைவைத்து அழுத்துவது கூடாது



எண்ணெய் சுரப்பி நாளங்களில் பிசுபிசுப்பு மிகுந்த எண்ணெய்ப்பசை, தோல் பகுதியில் உள்ள சேதமடைந்த திசுக்கள், கிருமிகள் போன்றவற்றால் அடைப்பு ஏற்படலாம். அதைக் கொமிடொ (COMEDO) என்று சொல்வார்கள்.

இப்படி ஏற்பட்ட அடைப்பு காரணமாக தோல் பகுதியில் ஒரு சிறு வீக்கம் ஏற்படும். அந்த சிறிய வீக்கத்திற்கு WHITE HEAD என்று பெயர். வீக்கத்தின் தோல் பகுதி மூடி இருக்கும்.

இந்த வீக்கத்தின் தோல் பகுதி சிறிது திறந்து இருந்தால் அது பார்ப்பதற்கு கறுப்பாக இருக்கும். WHITE HEAD என்று பெயர். இந்தக் கறுப்பு நிறம் அழுக்கு என்று நினைப்பார்கள்.

அப்படி அல்ல. சுரப்பி நாளங்களில் அடைபட்டிருக்கும் பொருட்கள் திறந்த தோல் பகுதி மூலம் வெளிக் காற்று மண்டலத்தி லுள்ள OXYGEN காற்றினால் கருமை நிறம் அடைகிறது.

உடைந்த கொமிடோவில் அழற்சி ஏற்பட்டு மேலும் சில கிருமிகளின் தாக்கம் ஏற்பட்டு, சிவந்த கடினமான கட்டியாக மாறுகிறது. இதற்கு (PAPULE) போப்யூல் என்று பெயர்.

இந்த சிவந்த கட்டியில் சலம் உண்டாகி, நடுவில் மஞ்சள் கலந்த பழுப்பு நிறம் ஏற்படுகிறது. இதற்கு (PUSTULE) பஸ்ட்யூல் என்று பெயர்.

இந்த சின்ன கட்டிகள், சில சமயம் பெரிதாகவும், ஆழமாகவும், மிகுந்த வலியுடனும் இருக்கும். இதற்கு (NODULE) நோட்யூல் என்று பெயர். இந்த வகையினால் முகத்தில் தழும்புகள் உண்டாகும்.

நகத்தினால் முகப்பருவைக் கிள்ளி விடக் கூடாது. இதனால் தோலின் மேல் பகுதியிலுள்ள அடைப்பு நீங்கி முகப்பரு குறைந்தது போன்று தோற்றம் கொடுக்கலாம். ஆனால் அடிப்பகுதியில் உள்ள அடைப்புக்களில் கசிவுகள் ஏற்பட்டு கிருமிகள் அடுத்த இடத்திற்குச் செல்கின்றன.

இதனால் இன்னும் அதிகமாக சிவந்து மறுபடியும் கடினமான கட்டி போன்று முகப்பரு ஏற்படலாம். மேலும் கிள்ளிவிட்ட இடத்தில் தழும்பு ஏற்படும். சில சமயம் குழியாக உள்ள தழும்பு ஏற்படவும் வாய்ப்பு உண்டு.

முகப்பருவைக் கைகளினால் அழுத்திப் பார்க்கவோ அல்லது மெதுவாக சலத்தை எடுத்து விடுவதற்காகவோ எந்த முயற்சியும் செய்யக்கூடாது.

முகத்தில் உள்ள நரம்புகள் மூளைப் பகுதிக்கு மிக அருகில் உள்ளன. முகப் பருக்களில் உள்ள கிருமிகள் தோலின் அடிப்பகுதியில் சென்று மற்ற இடங்களுக்குப் பரவலாம். இந்தக் கிருமிகள் மூளைப் பகுதிக்கு சென்றால் உயிருக்கே ஆபத்து ஏற்படலாம்.

ஒரு சிலருக்கு கைகளை முகத்தில் வைத்துக் கொண்டிருக்கும் பழக்கம் உண்டு. கவலையாக இருக்கும் போது கன்னத்தில் கை வைத்துக்கொண்டு இருப்பார்கள்.

ஏதாவது யோசனை செய்யும் போது முகத்தில் தாடைப் பகுதியைத் தடவுவார்கள். இதனால் இன்னும் முகப்பரு கடினமாக ஆகிவிடலாம்.

நெற்றிப்பகுதியிலும் தாடைப் பகுதியிலும் போடப்படும் வார்ப்பட்டைகள் முகப் பருவிற்கு அழுத்தம் கொடுக்கின்றன.

அதனால் குறிப் பிட்ட இடங்களில் மட்டும் பருக்கள் நிரந்தரமாக வருவதற்கு வாய்ப்புண்டு. முடிந்தவரை முகத்தில் எந்தப் பகுதியிலும் அழுத்தம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதே நல்லது. முகத்தில் பருக்கள் வந்து விட்டதே என்று அங்கலாய்ப்பதை விட்டு, வருமுன் காப்பது நல்லதுதானே.




# தவறான சிந்தனை நினைவாற்றலை அதிகரிக்கும்

கெட்ட எண்ணம் நினைவாற்றலை அதிகரிக்கும் என்ற ருசிகர தகவலை ஆய்வாளர்கள் வெளியிட்டுள்ளனர். பொசிட்டிவ் அதாவது நல்ல சிந்தனையுடன் இருப்பவர்களைக் காட்டிலும் மோசமான சிந்தனை அல்லது நெகடிவ் சிந்தனை உள்ளவர்களின் மூளையில் நினைவாற்றல் அதிகமாக இருக்கிறது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

நல்ல சிந்தனையுடன் இருப்பவர்கள் குறைவான கவனம் காரணமாக நிறைய தவறு செய்ய வாய்ப்பு இருப்பதாகவும் ஆனால் நெகடிவ் சிந்தனையுடன் இருக்கும்போது நினைவாற்றல் அதிகமாக காணப்படுவதால் அவர்களால் துல்லியமான முடிவுகளைத் தரமுடிகிறது என்று அவர்கள் கூறியுள்ளனர்.

அதாவது நல்ல சிந்தனையில் இருக்கும் போது சினம் அல்லது கோபத்தை கட்டுப்படுத்திக்கொள்ளும் போது அது கடந்த கால சம்பவங்களை நினைவுபடுத்தும் சக்தி அழிக்கப்பட்டு விடுகிறது அல்லது சிதைக்கப்பட்டு விடுகிறது. இதனால் அவர்களால் பணிகளை துல்லியமாக நிறைவேற்ற முடிவதில்லையாம்.

பொதுவாக மன இறுக்கத்தை குறைக்க கெட்ட சிந்தனைகளை தவிர்த்து நல்ல சிந்தனைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இந்நிலையில் கெட்ட சிந்தனை இருந்தால் நினைவாற்றல் அதிகரிக்கும் என்று நிபுணர்கள் கூறி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

> பெற்றோர் விதிக்கும் தடைகளும் கட்டளைகளும் ஒருவருடைய ஒழுக்க உணர்வுகளாக உயிர் வாழ்ந்து வருகின்றன.
>
> – ப்ராய்டு

வலம்புரி

## பிள்ளைகளின் ஒழுக்கப் பிறழ்வை தடுப்பது பெற்றோரின் கடமை

யாழ்ப்பாணக் குடாநாட்டின் சமகால கலாசார நிலைவரம் மிகவும் கவலை தருவதாக உள்ளது.

இணையத்தளங்கள் முதல் மதுபானசாலைகள் வரை இளம் சமூகத்தின் எதிர்காலத்தை இருளில் மூழ்கடிப்பதில் பெரும்பங்காற்றி வருகின்றன.

குறிப்பாக உயர்தர மாணவர்கள் மத்தியில் இவற்றின் தாக்கம் மேலோங்க, கற்றல் கவனக்கலைப்பு ஏற்படுகின்றது.

இது குறித்து பெற்றோர்கள் விழிப்பாக இருப்பது கட்டாயமானதாகும்.

யாழ்.மாவட்டத்தின் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் வீழ்ச்சி நிலைகுறித்து கவலை கொள்ளும் அதேநேரம் அத்தகைய அவல நிலையை தவிர்ப்பது குறித்து ஆராய்வதும் அதற்கான நிவாரணத்தைத் தேடுவதும் அவசரபணியாக உள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் திரு.லி.இளங்கோ அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்விப்புலம் சார்ந்தவர்களுடன் கலந்துரையாடலொன்றை நடத்தினார்.

இக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் முன்வைத்த கருத்தில்,

'பொதுவாக மாணவர்கள் சிரேஷ்ட மாணவர்களைப் பின்பற்றியே தமது பழக்கவழக்கங்களை உருவாக்கிக் கொள்கின்றனர். சிரேஷ்ட மாணவர்களின் நல்வழிகாட்டல் கிடைக்கும் போது மாணவர்களின் ஒழுக்கமும் அதனூடாக பாடசாலை ஒழுங்குக் கட்டமைப்பும் உயர்வு பெறுகின்றது. மாணவர்களின் நடத்தைசார் விடயங்களில் சிரேஷ்ட மாணவர்கள் அல்லது பாடசாலையை விட்டு வெளியேறியவர்கள் அதீத செல்வாக்குச் செலுத்துகின்றனர்' எனக் குறிப்பிட்டிருந்தார்.

அவர் குறிப்பிட்ட கருத்தின் யதார்த்தம் பற்றி பெற்றோர்கள் உணராதவரை எமது மாணவர்களின் கல்விப் பெறுபேற்றில் உன்னத நிலையை அடைவது கடினமாகவே இருக்கும்.

எனவே இங்குதான் பெற்றோர்களின் பொறுப்பு முதன்மை பெறுகின்றது.

தமது பிள்ளைகளின் ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் பெற்றோரின் கவனிப்பும், ஆலோசனையும் இருக்கும்போது பிள்ளைகள் பிறழ்வான பாதையில் பயணிப்பது முற்றாகத் தடைப்படுகின்றது.

எனினும் துரதிர்ஷ்டவசமாக யாழ்ப்பாண சமூகத்தில் குறித்த வயதிற்குப் பின்னர் பிள்ளையின் விடயத்தில் பெற்றோரின் தலையீடு – கண்காணிப்பு குறைவடைந்து போகிறது.

அதிலும் குறிப்பாக தந்தையின் கவனிப்பு குறைவடைகின்றது.

இன்றைய போர்ச் சூழலில் ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளின் நடத்தைசார் விடயங்களில் கூடிய கவனமெடுக்கத் தவறும் போது அவர்கள் தவறான பாதையில் செல்லும் பரிதாப நிலை ஏற்படலாம் என்பதால் முன் கூட்டிய கவனிப்பு பிள்ளைகள் தொடர்பிலான கவலையை இல்லாது செய்யும்.

# நாடு மெதுவாக இராணுவ ஆட்சியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது

## இடது சாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு தெரிவிப்பு

(கொழும்பு)

அனைத்து மதத்தவர்களும் தத்தமது மத அனுஷ்டானங்களை அனுஷ்டிப்பதற்கு உரித்துடையவர்கள். அதற்கான சுதந்திரம் வழங்கப்பட வேண்டுமென அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள உரிமை நாட்டில் மறுக்கப்படுவது எதிர்காலத்தில் பாரிய பிரச்சினையை தோற்றுவிக்கும்.

நாடு மெதுமெதுவாக இராணுவ ஆட்சியை நோக்கி நகர்ந்து கொண்டுள்ளது என்று இடதுசாரி முன்னணித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாடொன்றில் உரையாற்றுகையிலேயே விக்கிரமபாகு கருணாரத்ன இதனைத் தெரிவித்தார்.

மடுத் திருப்பதிக்கு அண்மையில் விஜயம் செய்த ஐ.தே.கட்சி எம்.பி. டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன பிரார்த்தனைகளை முடித்த பின்னர் அங்கு தங்கிவிட்டு செல்வதற்கு அனுமதி கேட்ட போது அதற்கு அப்பகுதி இராணுவ கட்டளைத் தளபதி அனுமதி வழங்காது அன்றிரவே மன்னாருக்கு திருப்பி அனுப்பியிருந்தார்.

இவ்வாறு அனுப்பப்பட்டதை எதிர்த்து ஜயலத் ஜயவர்தன எம்.பி.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார்.

பாதுகாப்பு செயலாளர் இராணுவத் தளபதிக்கு எதிராகவே இம்முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பான விசாரணைவெள்ளியன்று இடம்பெற்றது.

இதனையடுத்து இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே விக்கிரமபாகு கருணாரத்ன மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

மத உரிமைகள் மறுக்கப்படுவதை ஆரம்பத்திலேயே கிள்ளியெறிய வேண்டும். இல்லாவிட்டால் தமிழ் மக்களின் பிரச்சினையைப் போன்று விஸ்வரூபமெடுக்கும்.

அரசியல் கட்சியாக அல்ல ஜனநாயகத்தை பாதுகாக்கவே முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நாட்டில் யுத்தம் அவசரகாலச் சட்டம் எதுவும் அமுலில் இருக்கலாம். அதற்காக தத்தமது மத அனுஷ்டானங்களை முன்னெடுக்கும் உரிமையை பறிக்க முடியாது. மத உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டுமென அரசியலமைப்பிலேயே உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஜயலத் ஜயவர்த்தன எம்.பி.கத்தோலிக்கர் என்பதால் வெளியேற்றப்பட்டார்.

ஆனால் பௌத்த விகாரையில் தங்கியிருக்கும் எவரையாவது வெளியேற்ற முடியுமா?

அத்தோடு இவ்வாறான செயற்பாட்டை முன்னெடுக்கும் அதிகாரம் இராணுவத்தினருக்குக் கிடையாது.

ஆனால் இன்று நாட்டில் அனைத்தையும் மேற்கொள்ளும் அதிகாரம் இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டுள்ளது. மெது மெதுவாக நாடு இராணுவ ஆட்சியை நோக்கி நகர்ந்து கொண்டுள்ளது என்றார். (ஓ-6)

# இலங்கையின் நலனில் இந்தியா கவனம் செலுத்த வேண்டியது அவசியம்

## அமைச்சர் சந்திரசேகரன்

(கொழும்பு)

இலங்கையின் நெருங்கிய நட்பு நாடான இந்தியாவின் 60 ஆவது குடியரசு தினத்தில் இந்திய மக்களுக்கு ஏற்படுகின்ற நாட்டுப் பற்றுணர்வு மிகப் பெரும் வல்லரசுக்கான உந்து சக்தியை ஏற்படுத்த வேண்டுமென மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மிக நீண்டகாலமாக எமது நாட்டோடு இந்தியா கொண்டிருக்கும் பரஸ்பர புரிந்துணர்வு எதிர்காலத்தில் இன்னும் வலுப்பெறவேண்டும்.

இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் சவாலாக அமைந்துள்ள சகல நெருக்கடிகளையும் தீர்ப்பதற்கு இந்தியா தனது ஆத்மார்த்தமான பங்களிப்பினை செலுத்த வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் இலங்கைக்கு ஏற்பட்ட சர்ச்சைக்குரிய விவகாரங்களின் போதெல்லாம் இந்தியா வெறும் பார்வையாளர்களாக மட்டும் இருந்ததில்லை. பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நேச உறவோடு பங்காளியாகவே இந்தியா இருந்துள்ளது.

எனவே எதிர்காலத்திலும் இந்தியா இந்நாட்டின் நலனில் அக்கறையோடும் கரிசனையோடும் சாதகமான நிலைப்பாட்டில் இருக்க வேண்டும் என்றார். (ஓ-6)

# ஆங்கிலத்துடன் கணனி கல்வி அறிவு தொடர்பான வேலைத்திட்டம் ஆரம்பம்

## பிரதிக்கல்வியமைச்சர் சச்சிதானந்தன் தகவல்

(கொழும்பு)

கல்வி அமைச்சின் மூலம் ஆங்கிலத்தோடு கணனி கல்வி அறிவு தொடர்பான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கென ஆயிரம் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதிக் கல்வி அமைச்சர் எம்.சச்சிதானந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தகவல் தருகையில் கல்வி அமைச்சு அனைவருக்கும் கல்வி, தரமான கல்வி,தரமான கல்விக்கு தரமான ஆசிரியர்கள், தரமான ஆசி ரியர்களுக்கு தரமான நிர்வாகம், குறைந்த பொருளாதாரத்திற்கும் உலக மயத்திற்கும் ஏற்ப கல்விக் கொள்கையில் மாற்றம் ஆகிய 5 திட்டங்களை நடை முறைப்படுத்தி வருகின்றது.

அந்த வகையில் இலவசக் கல்வியை அமுல்படுத்த தேவையான ஆசிரியர்கள் ஓரளவு நியமிக்கப்பட்டுள்ளதோடு இலவசப்பாடப் புத்தகங்கள் முறையாக அச்சிட்டு வெளியிடப்பட்டும் வருகின்றன.

அத்தோடு உலக சவால்களுக்கு மாணவர்கள் முகம் கொடுப்பதற்கு ஏற்ப கல்வி அமைச்சு ஆங்கில அறிவோடு கணனி அறிவையும் மேம்படுத்த ஆயிரம் பாடசாலைகள் நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்டுள்ளன . (ஓ-6)

# அரச முகாமை உதவியாளர்களுக்கான போட்டிப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

(கொழும்பு)

அரச முகாமைத்துவ உதவியா ளர் சேவையின் அதியுயர் வகுப்புக்கு நியமனம் செய்வதற்காக ஜனவரி 31 மற்றும் பெப்பரவரி முதலாம் திகதிகளில் நடைபெறவிருந்த மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீ ட்சை காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது.

கொழும்பு, மாத்தறை, பதுளை, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய நக ரங்களில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையங்களில் நடைபெறவிருந்த இப்பரீட்சை நடைபெறும் திகதியும், பரீட்சை அனுமதி அட்டை வழங்கலும் பின்னர் அறிவிக்கப்படும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க அறிவித்துள்ள்தாக குறித்த பரீட்சை அதிகாரி சமீத் வலம்புரிக்குத் தெரிவித்தார். (ஓ-6)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## நீதிநெறிக் கோட்பாடுகள் என்றால் என்ன



கல்லான இதயங்கள்கூடச் சில வேளைகளில் மற்றவர்களுக்காக கனிவதுண்டு. நீ பிடித்துக் கொண்டிருக்கின்ற இந்தத் தனித்துவம் வெறும் மனமயக்கம், அதை இப்படிக் கெட்டியாகப் பற்றி கொண்டிருப்பது பாராட்டத்தக்கதல்ல. என்று சொன்னால் மனிதன் பயப்படுகிறான். ஆனால் அவனோ , முழுத் தன்னல மறுப்பு தான் எல்லா நன்னெறிக்கும் அடிப்படை என்று கூறுகிறான்.

இந்த முழுத் தன்னல மறுப்பு என்பது என்ன? ஆன்மா போல் தன்னைக் காட்டிக் கொண்டிருக்கின்ற தோன்றும் மனிதனை விடுவதே அது. எல்லா சுயநலத்தையும் விடுவதே அது. 'நான்', 'எனது',என்ற அகங்கார மமகாரங்கள் பழைய மூட நம்பிக்கையிலிருந்து பிறந்தவை. இந்தப் போலி ஆன்மா மறையும் அளவிற்கு உண்மை ஆன்மா வெளிப்பட்டுத்க தோன்றுகிறது. இதுவே உண்மையான தன்னலமறுப்பு. இதுவே எல்லா அறநெறி உபதேசங்களின் மையமும் அடிப்படையும் சாரமும் ஆகும். தெரிந்தோ தெரியாமலோ உலகம் முழுவதும் இந்தக் குறிக்கோளை நோக்கியே சென்று கொண்டிருக்கிறது; நடைமுறையிலும் ஓரளவு இதை அனுசரிக்கிறது. பெரும்பாலானோர் தாங்கள் உணராமலேயே இதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் உணர்வு பூர்வ மாகச் செய்யட்டும் 'நான்', 'எனது', என்பவை உண்மையான ஆன்மாவல்ல, ஆன்மாவின் தடைகளே என்று அவர்கள் உணர்ந்து அவ ற்றை விடட்டும். இந்தத் தோன்றும் மனிதன் அகத்தேயுள்ள எல்லையற்றஉண்மையின்ஒரு மின்னல் தோற்றம் மட்டுமே; எல்லாமாக இருக்கும் எல்லையற்ற நெருப்பின் ஒரு பொறியே. அவனது உண்மையான இயல்புஎல்லையற்றது.

# ஈழத்தமிழர் பிரச்சினையில் ஆர்வம் காட்டும் இந்தியா !

தமிழகத்தில் இருந்து வெளியாகும் தினமணி நாளேட்டின் வார ஏடான தமிழன் எக்ஸ் பிரசில் வெளிவந்த கட்டுரை இங்கு தரப்படுகின்றது.

வெளியுறவுத் துறைச் செயலாளர் சிவ் சங்கர் மேனனின் இலங்கை விஜயத் திற்குப் பிறகு, நாளு க்கு நாள் மாறி வரும் போர் சூழ்நிலையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண இந்தியா என்ன செய்ய வேண்டும்? என்ற கேள்வி எழுந் துள்ளது. அதிலும் குறிப்பாக, தமிழ் நாட் டில் இந்தக் கேள்வியின் தாக்கமும் அதற் கான பதிலில் உள்ள எதிர்பார்ப்பும் அதிக மாகவே இருக்கிறது.

அதுபோன்றே, இலங்கையிலும், குறிப்பாக அங்குள்ள தமிழர்கள் மத்தியில் " இந்தியா என்ன செய்யமுடியும்? என்ற கேள்வி எழுந்துள்ளது. உலக நாடுகள் மத்தியிலோ, இலங்கை இனப்பிரச்



சிவசங்கர் மேனன், ராஜபக்ஷே

சினைக்கு தீர்வுகாண இந்தியா என்ன செய்துவிட முடியும்? என்பது மாதிரியான எண்ணவோட்டமே மேலோங்கியுள்ளது.

இலங்கை என்றல்ல... இன்றைய உலகச் சூழ்நிலையில் எந்தவொரு நாடும் மற்றொரு நாட்டின் உள்விவகாரங்களில் திடீரென்று தலையிடுவது சாத்தியமில்லை. ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கில் அமெ ரிக்க இராணுவம் செய்வதறியாமல் திகைத்து நிற்பதை நாம் இன்றும் பார்க்கி றோம். அண்மைக்காலத்தில் , பாலஸ் தீனத்தின் மீது தாக்குதல் நடத்திய இஸ் ரேலும், மும்பைத் தீவிர வாதத் தாக்குதலுக் குப் பின் பாகிஸ்தானும் உலக நாடுகளிடம் வாங்கிக் கட்டிக்கொள்வதும் கண்கூடாகவே நமக்குத் தெரிகிறது.

இலங்கையில் இராணுவ ரீதியாகவும், ராஜரீக வழியிலும் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான அமைத்தீர்வு காண் பதற்கு இந்தியா உள்ளிட்ட பல்வேறு உலக நாடுகள் பல்வேறு விதங்களில் பல ஆண்டு களாக முயன்று வந்துள்ளன. ஆனால், முழு வெற்றியடைய முடியவில்லை. அந்த நாட்டில் உள்ள தமிழ் மற்றும் சிங்கள அரசியல் தலைமைகளிடையே கருத் தொற்றுமை ஏற்படாமல் இந்தியா உட்பட்ட வெளி நாடுகளால் எதுவுமே அங்கே சாதித்து விடமுடியாது.

ராஜீவ்– ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தில் 1987 ஆம் ஆண்டு இந்தியா கையெழுத் திட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதே. இலங்கை தமிழ்க் கட்சிகளிடையேயும் ஆயுதக் குழுக்களிடையேயும் இருந்த பரஸ்பர நம்பிக்கையின்மையால் தான் அதன் காரணமாகவே இந்தியா அளித்த ஆயுதங்களை வைத்துக்கொண்டு ஒரு வருக்கொருவர் அடித்துக்கொண்டு செத்து மடிந்தார்கள்.

இதுபோன்ற சூழ்நிலையில் இலங்கை சென்ற வெளியுறவுத் துறைச் செயலர் சிவ்சங்கர் மேனன் அந் நாட்டு அதிபர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்ததுடன் நின்று விடவில்லை. பாராளுமன்ற எதிர்க் கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமரு மான ரணில்விக்கிரம சிங்கவுடனும் பேச்சுவார்த்தை நடத்தினார். அதைவிட முக்கியமாக விடுதலைப் புலிகள் இயக்கத் திற்கு ஆதரவு தெரிவித்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினார். அதுபோன்றே பிற மிதவாத தமிழர் கட்சித்தலைவர்களுடனும் ஆனந்தசங்கரி, சித்தார்த்தன், சிறிதரன் ஆகியோருடனும் கலந்துரையாடினார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் வெளியுறவுத் துறைச் செயலாளரை சந்தித்துப் பேசினார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் காரண காரியங்களும், எதிர்ப்புக்களும் என்ன? இந்தியாவைப் பொறுத்தவரை இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண இலங்கையில் உள்ள அனைத்து மிதவாத அரசியல் கட்சிகளும் மனப்பூர்வமாக முன் வர வேண்டும் என்று கருதுகிறது.

அப்படிப்பட்ட ஆக்கபூர்வமான செயல் பாட்டிற்கும் அவர்களின் முயற்சிகளுக்கும் இந்தியாவின் தார்மீக ஆதரவு எப்போதும் உண்டு என்ற நிலையில் இருக்கிறது. அதுபோன்றே எப்போதெல்லாம் பேச்சு வார்த்தைகளில் சுணக்கமோ, பிரச்சினை களோ தோன்றினாலும் அப்போது குறுக் கிட்டு பேச்சுவார்த்தை மூலமாகவே அந்தக் குழப்பங்களை தீர்க்க இந்தியா முயற்சி செய்யும். இதுபோன்ற ஒரு நல்லெண் ணத்தைத்தான் சிவ்சங்கர் மேனன் இலங்கையில் வெளிப்படுத்தியிருக்க முடியும்.

என்றாலும், குறிப்பாக அதிபர் ராஜபக் ஷவுக்கு மட்டுமின்றி தன்னைச் சந்தித்த பிற இலங்கை அரசுத் தலைவர்களிடமும் சிவ் சங்கர் மேனன் தெரிவித்த 'மெசேஜின்' சாராம்சம் இதுதான்: " இலங்கை இரா ணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையேயான போர்முடிவுக்கு வரும் சாத் தியக் கூறுகள் அதிகரித்துள்ள நிலையில் அரசியல் தீர்வுக்கான அமைதிப்பேச்சு வார்த்தையை முடுக்கிவிடவேண்டும்" இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. இனப் போர் முடிவுக்கு வரும் சூழ்நிலையில் அமைதிப் பேச்சுவார்த்தை துவங்கியி ருக்கவில்லையென்றால் இலங்கைத் தமி ழர்கள் மத்தியில் ஓர் " அரசியல் சூன்யம்" தோன்றும் சூழ்நிலை உருவாகலாம். இதன்காரணமாகவே அரசியல் ரீதியாக தமிழர்கள் பெறவேண்டிய " அதிகாரப் பகிர்வு" உட்பட்ட உரிமைகளை முழு அள வில் அவர்கள் பெறுவது இயலாமல் போக லாம். இதுவே எதிர்காலத்திலும் இலங்கை யின் அமைதிக்கும் இருநாட்டு உறவுகளுக் கும் மீண்டும் பங்கம் விளைவிக்கவும் காரணமாகலாம். அதனைத் தவிர்ப்பதே இந்திய அரசின் தலையாயக் கடமை. அதா வது இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை அரசியல் ரீதியாக நிலைநிறுத்தினால் மட்டுமே இருநாடுகளுக்கிடையேயான உறவு என்றென்றைக்கும் சீரடைய முடியும்.

இதுபோன்றே இலங்கைத் தமிழர் அமைப்புகளுடனான இந்திய உறவும் என் றென்றைக்கு நிலைபெற வேண்டிய ஒன்றா கும். 'தொப்புள்கொடி உறவு' இங்கு சிலர் கூறிவந்தாலும் இலங்கைத் தமிழ் இயக் கங்களில் சில அந்த உறவை ஒரு தலைப் பட்சமாகவே பயன்படுத்தி வந்துள்ளன.

அதுபோன்றே ராஜீவ்– ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை ஆதரித்த பல இலங்கைத் தமிழர் கட்சிகளும் அது கையெழுத்து ஆனவுடனேயே இந்தியாவின் இலங்கை அரசும் அங்குள்ள தமிழர் கட்சிகளும் நேரடி யாகப் பேச்சுவார்த்தை மூலம் " அதிகாரப் பகிர்வு உட்பட அரசியல் தீர்வுகளை அலசி ஓர் அமைதித்தீர்வை எட்டுவதே சிறந்த முறையாக அமையும். அத்தகைய தீர்வை செயல்படுத்துவதற்கு இந்தியா உதவும் என்ற நிலையே தற்போது இருக்கிறது.

இலங்கை அரசைப் பொறுத்த வரை "தமிழர் தேசியக் கூட்டணியுடன் பேச்சு வார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் அதிபர் ராஜபக்ஷ ஆர்வமாக இருக்கிறார்" என்று எண்ண இடமிருக்கிறது.

ஏனென்றால் போரினால் வென்றாலும் தனது அரசியல் எதிர்காலத்தை அமைதி யினாலேயே இலங்கையில் நிலை நிறுத்திக் கொள்ள முடியும் என்பதை தேர்ந்த அரசி யல் வாதியான ராஜபக்ஷ உணர்ந்திருக் கிறார்.

இலங்கைத் தமிழர்களிடையே உண்மையான அமைதி திரும்பவேண்டு மென்றால் அதற்கு அவர்களது ஆதர வைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டணி



யின் ஒத்துழைப்பும் உறுதுணையும் வேண் டும் என்பதையும் அதிபர் ராஜபக்ஷ புரிந்து கொண்டிருப்பார் என்றே தோன்று கிறது.

தொடர்ந்து சிங்கள அரசியல் தலைவர் களிடமிருந்தும் அவர்கள் தலைமை யேற்றுள்ள இலங்கை அரசிடமிருந்தும் நியாயமான அரசியல் தீர்வு கிடைக்கப் பெறாத தமிழ்மக்களும் அவர்களின் அரசியல் தலைவர்களும் இந்திய உதவி யையே நாடுவார்கள் என்பதையும் அவர் எதிர்பார்த்திருப்பார் என்று எண்ண இட மிருக்கிறது.

இதுபோன்ற இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண இந்தியா தலையிட்டு வழிவகை செய்யவேண்டுமென்பதில் அங்குள்ள தமிழர்கட்சிகள் தெளிவாக உள்ளன. இதனை தமிழ்த்தேசிய கூட்ட மைப்பு உட்பட்ட தமிழர் கட்சித்தலைவர்கள் சிவ்சங்கர் மேனனிடம் தெரிவித்தார்கள் என்று அறியப்படுகிறது.

அதேசமயம் எதிர்நோக்கியுள்ள அரசி யல் சூழ்நிலையில் தங்களுடைய பங்கும் பங்களிப்பும் என்னவாக இருக்கமுடியும் என்று அவர்கள் தெளிவான ஒரு முடிவை எடுத்தால் மட்டுமே இந்தியாவால் இந்த விஷயத்தில் அடுத்த அடி எடுத்து வைக்க முடியும். இது குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு பொருந்தும் என்றாலும் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுக்கு அளித்துள்ள தொடர் வாக்குறுதியைத் தொடர்ந்து சிவ்சங்கர் மேனனும், " கூட்ட மைப்பு தலைவர்கள் எப்போது வேண்டு மென்றாலும் புதுடில்லி வந்து இந்திய அர சுடன் பேச்சுவார்த்தை நடத்தலாம்' என்று அழைப்பு விடுத்துள்ளார் என்றும் தகவல்.

"இனப்போர்" உச்ச கட்ட நிலையை அடைந்துள்ள நிலையில் வெளியுறவுத் துறைச் செயலரின் இலங்கைப் பயணம் மிக முக்கியமானவொன்றாகும்.

போர் முனையில் விடுதலைப்புலிகள் அடைந்துள்ள தொடர் பின்னடைவுகளை ஒட்டி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இன்னும் அதிகாரப் பகிர்வு பற்றி பேச்சுவார்த்தைக்கு முன்வரவில்லை. இந்நிலையில் இந்தியா வின் முன்னெடுப்பும் பங்களிப்பும் மிக அவ சியமானதும், முக்கியமானதுமாகும்! " அடுத்த மாதம் வெளியுறவுத் துறை அமைச் சர் பிரணாப் முகர்ஜி இலங்கை செல்வார்" என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே அரசியல் தீர்வுமற்றும் பங்களிப்பு குறித்த தமிழ்தேசியக் கூட்ட மைப்பின் எண்ணங்களும் முடிவுகளும் தெரியத்துவங்கியிருக்கும். அதனை யொட்டியே இந்தியாவின் அடுத்த கட்ட நட வடிக்கையும் இலங்கை அரசின் முடிவுக ளும் இருக்குமென்று எதிர்பார்க்கலாம்.

# ஒருநாள் தொடரை ஆஸி. மண்ணில் வென்று தென்னாபிரிக்க அணி வரலாறு படைத்தது

(அடிலெய்ட்)

டி வில்லியர்ஸ்-அம்லாவின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் தென்னாபிரிக்க அணி நான்காவது போட்டியிலும் 8 விக்கெட்டுக்களால் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தி தொடரை 3:1 என்ற கணக்கில் முன்னிலை பெற்று தனதாக்கியது.


அம்லா

இதன் மூலம் தென்னாபிரிக்க அணி அவுஸ்திரேலிய மண்ணில் முதன் முறையாக ஒருநாள் தொடரை கைப்பற்றிச் சாதனை படைத்தது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 3 டெஸ்ட்,2 இருபது-20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை 2:1 என்ற கணக்கில் தென்னாபிரிக்க அணியும் இருபது-20 தொடரை 2:0 என்ற கணக்கில் அவுஸ்திரேலிய அணியும் கைப்பற்றியது.

தொடர்ந்து நடைபெற்ற ஒருநாள் தொடரின் முதல் மூன்று போட்டிகளில் இரண்டில் வென்று தென்னாபிரிக்க அணி 2:1 என்ற கணக்கில் முன்னிலையிலிருந்தது.

இந்நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான நான்காவது ஒருநாள் போட்டி நேற்று அடிலெய்டில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி ஆரம்பத்திலேயே அதிர்ச்சியளித்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான வோர்னர் 1,மார்ஷ் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அவுஸ்திரேலிய அணி 2.5 ஓவர்களில் 17 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 2 விக்கெட்டுக்களையிழந்தது.

எனினும் 3ஆவது விக்கெட்டுக்காக இணைந்த அணித்தலைவர் ரிக்கி பொன்டிங்-மைக்கெல் ஹசி ஜோடி பொறுப்பான இணைப்பாட்டத்தை வழங்கி அவுஸ்திரேலிய அணியை சரிவிலிருந்து மீட்டது.

இதில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய பொன்டிங் 46ஆவது பந்தில் அரைச்சதத்தை பூர்த்தி செய்ய அவுஸ்திரேலிய அணி 17.2 ஓவர்களில் 100 ஓட்டங்களைக் கடந்தது.

எனினும் மறுமுனையில் நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய மைக்கெல் ஹசி 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய டேவிட் ஹசி நிதானமாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் அணித்தலைவர் பொன்டிங் 70 பந்துகளில் (9பவுண்டரிகள் அடங்கலாக) 63 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய ஹடின் 3 ஓட்டங்களை மாத்திரமெடுத்து ஆட்டமிழந்து வெளியேற அவுஸ்திரேலிய அணி 23.5 ஓவர்களில் 128 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 5 விக்கெட்டுக்களையிழந்தது.

தொடர்ந்து 6ஆவது விக்கெட்டுக்காக டேவிட் ஹசியுடன் இணைந்த வைற் நிதானமாகத் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களை எடுக்க அவுஸ்திரேலிய அணி 30.1 ஓவர்களில் 150 ஓட்டங்களைக் கடந்தது.

எனினும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய டேவிட் ஹசி 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய ஹோப்ஸ் அதிரடியாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் வைற் 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய ஜோன்ஸன் ஓட்டமெதனையும் எடுக்காமல் ஆட்டமிழக்க அவுஸ்திரேலிய அணி 41.2 ஓவர்களில் 189 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்டுக்களையிழந்தது.

அடுத்து ஹில்பென் ஹயூஸ் களமிறங்க மறுமுனையில் ஹோப்ஸ் அதிரடியாகத் துடுப்பெடுத்தாட அவுஸ்திரேலிய அணி 44.4 ஓவர்களில் 200 ஓட்டங்களை கடந்தது.

எனினும் ஹோப்ஸ் 44 பந்துகளில் (2 பவுண்டரிகள்,ஒரு சிக்ஸர் அடங்கலாக) 42 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து தைட் களமிறங்க மறுமுனையில் ஹில்பென் ஹயூஸ் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அவுஸ்திரேலிய அணி 48 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களை யுமிழந்து 222 ஓட்டங்களை எடுத்தது. இதில் தைட் 4 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார்.

பந்துவீச்சில் ஸ்ரையன்,நிற்னி ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் அணித்தலைவர் போத்தா 2 விக்கெட்டுக்களையும் அல்பி மோர்கல்,எம்.மோர்கல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 223 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு அம்லா-கிப்ஸ் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 58 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது கிப்ஸ் 29 பந்துகளில் (8 பவுண்டரிகள் அடங்கலாக) 38 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய கலிஸ் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க தென்னா பிரிக்க அணி 12.2 ஓவர்களில் 79 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 2 விக்கெட்டுக்களையிழந்தது.

எனினும் 3ஆவது விக்கெட்டுக்காக இணைந்த அம்லா-டி வில்லியர்ஸ் ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்க தென்னாபிரிக்க அணி 15 ஓவர்கள் நிறை வில் 100 ஓட்டங்களைக் கடந்தது. இதில் அம்லா 70 ஆவது பந்தில் தனது அரைச் சதத்தை பூர்த்தி செய்து அசத்தினார்.

தொடர்ந்து அதிரடியாக ஆடிய இந்த ஜோடியின் இணைப்பாட்டத்தின் மூலம் தென்னாபிரிக்க அணி 27.1 ஓவர்களில் 150 ஓட்டங்களைக் கடந்தது.

இதில் அதிரடியாக ஆடிய டி வில்லியர்ஸ் 50 பந்துகளில் அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

இந்த ஜோடியைப் பிரிக்க அவுஸ்திரேலிய அணித்தலைவர் பொன்டிங் பந்துவீச்சாளர்களை மாற்றியும் களத்தடுப்பில் பல வியூகங்கள் வகுத்தும் பலனளிக்காமல் போக தென்னாபிரிக்க அணி 34.1 ஓவர்களில் 200 ஓட்டங்களை எடுத்தது.

இறுதியில் 38.1 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 223 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணி அபார வெற்றி பெற்றது.

இதில் டி வில்லியர்ஸ் 85 பந்துகளில் (6 பவுண்டரிகள்,ஒரு சிக்ஸர் அடங்கலாக) 82 ஓட்டங்களையும் அம்லா 103 பந்துகளில் (7 பவுண்டரிகள் அடங்கலாக) 80 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹில்பென் ஹயூஸ், ஹோப்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 3:1 என்ற கணக்கில் முன்னிலை பெற்று தொடரை தனதாக்கியது.

அத்துடன் தென்னாபிரிக்கா,அவுஸ்திரேலிய மண்ணில் முதன் முறையாக ஒருநாள் தொடரை வென்று சாதனை படைத்தது.

இப்போட்டியில் தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்கு வழியமைத்த டி வில்லியர்ஸ் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

**தொடரும் தோல்வி**

அவுஸ்திரேலிய அணி இறுதியாக சொந்த மண்ணில் நடந்த நான்கு ஒருநாள் தொடர்களில் நியூசிலாந்து,பங்களாதேஷ் தொடர் தவிர்ந்த ஏனைய இரண்டிலும் தோல்வி அடைந்தது. இந்திய அணியிடம் தொடரை இழந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## இந்திய அணி கொழும்பு வந்தது

(கொழும்பு)

இலங்கை அணியுடனான கிரிக்கெட் போட்டியில் விளையாட இந்திய அணி கொழும்பு வந்தது. இந்தியா-இலங்கை அணிகளுக்கு இடையே 5 ஒருநாள் மற்றும் ஒரு இருபது-20 போட்டிகள் நடைபெற இருக்கிறது.

முதல் போட்டி நாளை தம்புள்ளையில் நடைபெறுகிறது. இதற்கான இந்திய அணி



சென்னையிலிருந்து விமானம் மூலம் கொழும்பு வந்தது.

கொழும்பு விமான நிலையத்தில் இந்திய வீரர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது. பின்பு இந்திய வீரர்கள் அனைவரும் ஹோட்டல்களில் தங்க வைக்கப்பட்டனர். வீரர்கள் தங்கியிருக்கும் ஹோட்டல்களுக்கு பாதுகாப்பு பலப்ப டுத்தப்பட்டுள்ளது.

(5)

## மென்டிஸை சமாளிக்க தயார்; அதிரடி நாயகன் சேவாக் சவால்

(டில்லி)

அஜந்த மென்டிஸின் சுழற்பந்து வீச்சை எதிர்கொள்வதில் பிரச்சினை இல்லை என்று இந்திய அணியின் அதிரடி ஆட்டக்காரர் சேவாக் கூறியுள்ளார். இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் வீரேந்திர சேவாக் டில்லியில் அளித்த ஒரு பேட்டியில் கூறியதாவது;


சேவாக்

கிரிக்கெட் விளையாட்டில் உள்ள நுணுக்கங்கள் எனக்கு நன்றாகத் தெரியும். களத்தில் என்ன நடக்கும் என்பதை நான் அறிவேன். மென்டிஸ் பந்துவீச்சை எப்படி எதிர்கொள்வது மற்றும் அவர் பந்துவீசுகையில் எந்த மாதிரியான களத்தடுப்பு இருக்கும் என்பதும் எனக்குத் தெரியும்.

பாகிஸ்தானில் நடந்த ஆசியக் கிண்ணப் போட்டியில் மென்டிஸ் பந்துவீசுகையில் எதிர் முனையில் நின்று அவரது பந்துவீச்சு முறையை நான் நன்கு கவனித்தேன். அவர் ஓப் ஸ்பின், குக்லி முறையில் வீசுகிறார். அல்லது பந்தை நடுவிரலால் தள்ளுகிறார்.

எனவே மென்டிஸ் பந்துவீச்சை அடித்து ஆடுவதில் எனக்குப் பிரச்சினை இல்லை. துடுப்பாட்ட வீரர் தனது பந்துவீச்சு முறையை முழுமையாக அறிந்து விட்டார் என்று தெரிந்தாலே ஒரு பந்துவீச்சாளர் மனதளவில் நிலை குலைந்து விடுவார்.

அவர் பந்து வீசுகையில் களத்தடுப்பாளர்கள் அதிகமாக துடுப்பாட்ட வீரர்களின் அரு கில் நிறுத்தப்படுவதால் நல்ல இடம் கிடைக்கும். அப்போது தவறுதலாக அடிக்கப்படும் பந்து கூட பவுண்டரிக்கு செல்ல வாய்ப்பு உள்ளது.

நான் முடிந்து போன இன்னிங்ஸை திரும்பிப்பார்ப்பது இல்லை.அணியின் வெற்றியை விட அதிக சுவாரஸ்யமானது வேறு எதுவும் கிடையாது. எல்லோரும் அணி வெற்றிக்காகத் தான் ஆடுகிறார்கள்.மற்றபடி சாதனைகள் எதுவும் பெரிதல்ல.எப்படி நின்று பந்தை எதிர் கொள்வது என்பது குறித்து கவாஸ்கர் கொடுத்த ஆலோசனை எனக்கு நல்ல பயனைத் தருகிறது. இவ்வாறு சேவாக் கூறியுள்ளார்.

**மாற்றி அமைப்போம்**

பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரை வென்ற மகிழ்ச்சியில் திளைக்கும் இலங்கை அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தனா லாகூரில் அளித்த பேட்டியில் கூறியதாவது; எங்களது கடந்த 7 ஒருநாள் போட்டித் தொடரில் பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடர் வெற்றி 6ஆவது வெற்றியாகும்.

கடந்த ஆண்டில் சொந்த மண்ணில் நடந்த இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரை இழந்தது தான் எங்களது மோசமான தோல்வியாகும். ஆனால் இந்த முறை அந்த நிலையை மாற்றி அமைப்போம் என்ற நம்பிக்கை இருக்கிறது.

தற்போது இந்திய அணி டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியில் நல்ல நிலையில் உள்ளது. கடந்த முறை நாங்கள் டெஸ்டில் இந்திய அணியை வீழ்த்தினோம். ஆனால் ஒருநாள் போட்டித் தொடரில் தோல்வி கண்டோம். எனவே இது நல்ல தொடராக இருக்கும். எங்களது வெற்றியை தொடர முயற்சிப்போம். இவ்வாறு அவர் கூறினார்.

## தொடரும் மோதல்களால்...

செய்துள்ளனர். புலிகள் பலம் பெற்று விளங்கிய இறுதிப் பிரதேசமான முல்லைத்தீவை இராணுவத்தினர் ஞாயிற்றுக்கிழமை கைப்பற்றியதாகவும் தொடர்ந்து திங்கட்கிழமை முழுவதும் காடுகளிலுள்ள புலிகளுடன் உக்கிர மோதல்களில் ஈடுபட்டதாகவும் இராணுவம் தெரிவித்தது.

போர் வலயம் சுருங்கியுள்ளதுடன் அப்பிரதேசத்தில் பெருந்தொகையான பொதுமக்கள் உள்ளனர். அண்மைக் காலமாக அங்கு நிலைமை மிக மோசமடைந்துள்ளது.

கடந்த இருநாட்களாக பொதுமக்கள் பலர் அங்கு கொல்லப்பட்டுள்ளனர் இது உண்மையிலேயே தற்போது ஒரு நெருக்கடியான சூழலை ஏற்படுத்தியுள்ளது. அண்மைக் காலம் வரை பொதுமக்களின் உயிரிழப்புக்களைத் தவிர்க்க மோதல்களில் ஈடுபடும் இரு தரப்பினருமே கடுமையாகப் பாடுபட்டனர்.

ஆனால் பெருமளவு மக்கள் மத்தியில் மோதல்கள் இடம் பெற்றுவரும் தற் போதைய சூழ்நிலையில் இது தொடர்பில் மிக மிக கவனம் செலுத்தாதுவிடின் இழப்புக்களைத் தவிர்க்க முடியாது போகும். அரசாங்கமானது தன்னிச்சையாக புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள சிறிய பிராந்திய மொன்றைப் பாதுகாப்பு வலயமாக கடந்த வாரம் பிரகடனப்படுத்தியதுடன் பாதுகாப்பளிக்கப்பட்ட அப்பிரதேசத்திற்கு அனைத்து பொதுமக்களையும் செல்லுமாறு அழைப்பு விடுத்தது.

ஆனால் அப்பிராந்தியத்தில் ஆட்லறி தாக்குதல் நடத்தப்பட்டமை குறித்து அநேக அறிக்கைகள் கிடைக்கப்பெற்றன. அண்மைய நாட்களில் பாதுகாப்பு வலயத்தில் மோதல் கள் இடம்பெறுவது வழமையாக உள்ளது என்பதுடன் இதற்கு யார் பொறுப்பு என மதிப்பீடு செய்வது எமக்கு கஷ்டமாக உள்ளது என்றார்.

## ஊடகவியலாளர் மீதான தாக்குதலை கண்டித்து கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஊடகவியலாளர்கள் மீது தொடர்ச்சியாக நடத்தப்பட்டுவரும் தாக்குதல்களை கண்டித்தும் ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தியும் தலைநகர் கொழும்பில் நேற்றுத் திங்கட்கிழமை பிற்பகல் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஊடக அடக்கு முறைக்கு எதிரான அமைப்பு ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டத்தில் சுதந்திர ஊடக இயக்கம், உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் உட்பட இடதுசாரிக் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்களும் கலந்து கொண்டன.

அலரிமாளிகையிலிருந்து 200 மீற்றர் தொலைவிலுள்ள காலி வீதி, கொள்ளுப்பிட்டிச் சந்தியில் பிற்பகல் 12.30 மணி தொடக்கம் 1.30 மணிவரை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் சுமார் நூற்றுக்கும் அதிகமான ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

ஊடகவியலாளர்கள் மீது படைத்தரப்பும் புலனாய்வுத்துறையினரும் தாக்குதல் நடத்துவதாகவும் அதற்கு அரசாங்கமே பொறுப்பு என்றும் வாசகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் முழக்கங்களை எழுப்பினர்.

அரசாங்கத்தையும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவையும் விமர்ச்சிக்கும் வாசகங்கள் அட்டைகளில் எழுதப்பட்டிருந்தன.

இந்த ஆர்ப்பாட்டத்தினால் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து கொள்ளுப்பிட்டி காலி வீதிச் சந்தி, டுப்ளிகேஷன் வீதி மற்றும் கொள்ளுப்பிட்டி சுற்றுவட்டம் வரை போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அலரி மாளிகை நோக்கி செல்ல முடியாதவாறு கொள்ளுப்பிட்டி சந்தி காலி வீதிக்குக் குறுக்காக கம்பி வேலிகள் போடப்பட்டிருந்தன.

கலகம் அடக்கும் பொலிஸாரும் படையிரும் காவல் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

(ச-5)

## இலங்கைக்கு வாருங்கள்...

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தலைவி ஜெயலலிதா ஆகியோருக்கு அழைப்பு விடுத்துள்ளார். இது குறித்து அவர் ஏசியன் டிபியூன் இணையத்தளத்துக்கு அளித்த பேட்டி ஒன்றில் கூறியுள்ளதாவது,

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களுக்கு திரும்பிவரும் தமிழர்களுக்கு நாங்கள் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து தருகிறோம்.

இதற்கு விடுதலைப் புலிகளின் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள தமிழர்களை விடுவிக்க வேண்டும். இலங்கை வரும்படி நான் ஏற்கனவே தமிழக முதல்வர் கருணாநிதியை கேட்டுக் கொண்டேன்.

தமிழர்களுக்கு இலங்கை அரசு கொடுக்கும் மரியாதை, அவர்களுக்கான உரிமைகளை முதல்வர் கருணாநிதி தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கை அரசை போர் நிறுத்தம் செய்யக்கோரி, இந்தியப் பிரதமருக்கு தமிழக முதல்வர் கருணாநிதி தமிழக சட்டப் பேரவையில் இறுதிக் கோரிக்கை வைத்துள்ளாரே என்று கேட்டதற்கு, அதைப்பற்றி கருத்து எதுவும் தெரிவிக்காத ராஜபக்ஷ,

தமிழக முதல்வர் போர் நிறுத்தத்தை விரும்பினால், விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வலியுறுத்த வேண்டும்.

புலிகள் ஆயுதங்களை ஒப்படைப்பதாக வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். ஆயுதங்களை ஒப்படைக்கும் நிகழ்ச்சி தமிழக முதல்வர் கருணாநிதியும், இலங்கை அரசும் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் நடைபெறும்.

நான் மூத்த அரசியல்வாதியான தமிழக முதல்வர் கருணாநிதி மீது மரியாதை வைத்துள்ளேன். அவர் இலங்கையில் தமிழர்களை சந்திக்க வரலாம். அவர்களை சந்தித்து அவர்களுக்கு இலங்கை அரசு அளிக்கும் மரியாதையை கேட்டறியலாம்.

அவர் விரும்பினால் தமிழக அரசியல் தலைவர்கள் கொண்ட ஒரு குழுவையும் அழைத்து வரட்டும் எனக் கூறிய ஜனாதிபதி மகிந்த, இதேபோல் பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் இலங்கைக்கு வரவேண்டும் என்றும் அந்தப் பேட்டியில் கூறியிருக்கிறார்.

தற்போது புலிகளின் கட்டுப்பாட்டில் ஒரு இலட்சம் முதல் இரண்டு இலட்சம் தமிழர்கள் இருப்பார்கள் என நினைக்கிறோம். புலிகள் கட்டுப்பாட்டில் 5 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவு இருந்தது.

தற்போது 350 இல் இருந்து 400 சதுர கிலோ மீற்றர் வரையே உள்ளது என்றும் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

(ச-5)

## முதல்வர்...

மருத்துவமனையில் முதல்வர் அனுமதிக்கப்பட்டபோது இருந்ததைவிட தற்போது அவர் நல்ல மேம்பட்ட உடல் நலத்துடன் உள்ளார் என்றும் அறுவைச்சிகிச்சை உள்ளிட்ட எந்த தீவிர சிகிச்சையும் மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லையென்றும் மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முதல்வருக்கு தொடர்ந்து பிசியோதெரபி செய்வதன் மூலமாகவே தசைப்பிடிப்பை சரிசெய்துவிடமுடியுமென்றும் ஒருவாரம் வரை முழு ஓய்வும் தொடர் சிகிச்சையும் அளிக்கவுள்ளதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் முன்பைவிட அதிக பூரண உடல் நலத்துடன் முதல்வர் கருணாநிதி வருவார் என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் முதல்வர் பற்றி சில விசமிகள் தவறான செய்திகளை பரப்பி வருகின்றனர். இதனால் வீணான வதந்திகளை பரப்புவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

## வீதிகள் எங்கும் பிணக்...

வருகின்றன.

குறிப்பாக உடையார்கட்டு, சுதந்திரபுரம் பகுதிகளிலும் பரந்தன் புதுக்குடியிருப்பு வீதியில் உடையார்கட்டு முதல் தேவிபுரம் வரையிலான பகுதிகளிலும் ஆயிரக்கணக்கான எறிகணைகள் வீழ்ந்து வெடித்தவண்ணமிருக்கின்றன.

உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் இயங்குகின்ற வைத்தியசாலையிலும் அருகில் இருக்கின்ற நெட்டாங்கண்டல் மருத்துவமனையிலும் இறந்த பொதுமக்களின் 26 உடல்கள் வைக்கப்பட்டுள்ளன.

காயமடைந்த 76 பொதுமக்களும் இவ் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 20 பேர் வரையிலான காயமடைந்தவர்கள் புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

நெட்டாங்கண்டல் மருத்துவமனையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டவர்கள் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். அவர்களுக்கு காலை உணவு வழங்கப்படவில்லை.

கடுமையான ஷெல் தாக்குதல்களினால் உறவினர்கள் வைத்தியசாலைக்கு வந்து சேரவில்லை. அவர்களுக்கான மருந்துகளை வழங்குவதிலும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுள்ளது.

பிரசவத்திற்கான மருத்துவமனையாக இந்த மருத்துவமனை மட்டுமே இயங்குகின்றது. இங்கும் எறிகணைகள் வீழ்ந்து வெடிக்கின்றன என்றார்.

இறந்தவர்கள் தொடர்பாக வைத்திய அதிகாரி குறிப்பிடும்போது, வீதிகளிலே பல இறந்த உடலங்கள் காணப்படுகின்றன. பொதுமக்கள் தமது உடமைகளுடன் பயணித்த வாகனங்கள் பல எரிந்து போய் காணப்படுகின்றன.

சில உடலங்கள் உறவிர்களால் எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. இருப்பினும் பலரின் கருத்துப்படி பல இடங்களிலே பல உடல்கள் சிதறிக் கிடப்பதாகவும் அவற்றை யார் எடுத்து அப்புறப்படுத்துவது என்ற சிக்கல் நிலைமையும் காணப்படுகிறது.

கடுமையான எறிகணைவீச்சு நடை பெற்றுக் கொண்டிருப்பதால் அப்பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடம்நோக்கி இடம் பெயருகின்றனர்.

சில உடல்கள் இந்தப் பகுதிக்கு கொண்டு வரப்படவில்லை. 26 உடல்கள் மட்டுமே மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டன. இவை இன்று (நேற்று) நடைபெற்ற தாக்குதல்களில் ஏற்பட்ட சம்பவங்களே.

எறிகணைகள் வீழ்ந்து வெடித்த இடம் அரசினால் அண்மையில் யுத்தமற்ற பிரதேசம் என அறிவிக்கப்பட்ட பாதுகாப்பு வலய பிரதேசங்களே எனக் கூறிய அவர், எறிகணைத் தாக்குதலுக்கு உள்ளான மருத்துவமனையும் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள்ளேயே அமைந்திருப்பதாகவும் இன்று (நேற்று) இறந்தவர்களில் அநேகமானவர்களும் காயமடைந்தவர்களும் இப்பாதுகாப்பு வலயப் பிரதேசத்திற்குள்ளேயே தாக்குதலுக்கு இலக்கானார்கள் எனவும் எறிகணைகள் உடையார் கட்டுக்கு தெற்குப் பக்கமாக இருந்தே வந்து வீழ்ந்ததாகவும் அநேகமாக படையினராலேயே இவ் எறிகணைகள் ஏவப்பட்டிருக்கலாம் எனவும் அவர் கூறினார்.

(ச-14)

## வன்னி வைத்திய...

அனுப்பி வைத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, முல்லைத்தீவு பகுதி நோக்கி மேற்கொள்ளப்படும் கடுமையான எறிகணை வீச்சுக்களால் நேற்று மட்டும் 300 பேர் வரை கொல்லப்பட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தும் உள்ளனர்.

இவர்களுக்கான அவசர மருத்துவ உதவிகள் தேவைப்படுகின்றன. தற்பொழுது 9 மருத்துவர்கள் மட்டுமே பணியில் ஈடுபடுகின்றனர். இவர்கள் இரவு பகலாக பணியில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால் 24 மணி நேரத்துக்குள் மருத்துவ உதவிப் பொருட்களை அனுப்பி வைக்குமாறு அவர் கோரியுள்ளார்.

அத்துடன் தேவைப்படும் பொருட் களின் பட்டியல்களையும் அவர் அனுப்பி வைத்துள்ளார்.

(ச-5)

## புதுக்குடியி...

ஈடுபட்டுள்ள படையினருக்கு உதவும் வகையில் விமானப் படையினரின் குண்டு வீச்சு விமானங்களும் விடுதலைப் புலிகளின் இனங்காணப்பட்ட இலக்குகளின் மீது குண்டுத் தாக்குதல்களை நடத்தி ஒத்துழைப்புவழங்கியதாகவும் அவர் கூறினார்.

(ச-5)

## பொதுமக்களின்...

அவசியம் ஏதும் எமக்கு இல்லை .நாங்கள் பாதுகாப்பு பகுதிகளையும் உருவாக்கி இருக்கிறோம் என்று கூறினார்.

உடையார்கட்டு பாடசாலையில் செயற்படும் மருத்துவமனையில் தாக்குதல் நடத்தப்பட்டதாக அங்குள்ள அரச மருத்துவர்களே தெரிவித்துள்ளார்களே என கேட்கப்பட்ட போது, அங்கு புதுக்குடியிருப்புப் பகுதியில் மருத்துவமனை இருக்கும் போது தற்காலிக மருத்துவமனையை அமைக்க அங்கு தேவை என்ன இருக்கிறது என்று கேள்வி எழுப்பிய இராணுவப் பேச்சாளர், விடுதலைப் புலிகளுக்கு சிகிச்சையளிப்பதற்காக இந்த மருத்துவமனை நிர்வகிக்கப்பட்டிருக்கலாம் எனவும் கூறினார்.

(ச-14)

## முல்லைத்தீவில் பேரவலம்...

சுதந்திரபுரம்சந்தி, உடையார்கட்டு ஆகிய பகுதிகளை நோக்கி நேற்று காலை 9.45 மணி முதல் இராணுவத்தினர் அகோர எறிகணைத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

சுதந்திரபுரம் சந்தியில் பிற்பகல் 2 மணியளவில் படையினரின் எறிகணைகள் ஐ.நா. தொண்டர் நிறுவனப் பணியாளர்கள் மற்றும் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் மேற்பார்வையில் இருந்த குடியிருப்பு பகுதிகளில் வீழ்ந்து வெடித்துள்ளன.

மூங்கிலாறு பகுதியில், பரந்தன் – முல்லைத்தீவு வீதியின், 3 கிலோ மீற்றர் நீளத்திற்கு பெருந்திரளாக இடம்பெயர்ந்து சென்று கொண்டிருந்த மக்களை இலக்கு வைத்து பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டதில் ஏராளமான மக்கள் கொல்லப்பட்டதுடன், அவர்கள் சென்று கொண்டிருந்த பல வாகனங்களும் வீதியோரம் இருந்த பல வீடுகளும் தீயில் எரிந்து நாசமாகின.

இதேவேளை– உடையார்கட்டு பகுதியில் இயங்கி வந்த மருத்துவமனையும் பீரங்கி தாக்குதலுக்கு உள்ளாகி ஏற்கனவே காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த ஏராளமான தமிழர்கள் கொல்லப்பட்டதுடன் மருத்துவ மனையின் 4 அம்புலன்ஸ் வாகனங்களும் அழிக்கப்பட்டுள்ளன.

இதனால் காயமடைந்தோரை எடுத்து வருவது முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளது.

கொல்லப்பட்டும் படுகாயமடைந்தும் வீழ்ந்து கிடந்தோரில் பெருமளவிலானோர் கைக்குழந்தைகளும் சிறுவர்களும் ஆவர்.

இத் தாக்குதல்களில் மட்டும் 300 வரை யான தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் பணியாளர் ஒருவரும், கியூடெக் நிறுவனத்தின் பணியாளர் ஒருவர் உட்பட ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

எறிகணைத் தாக்குதல்கள் – மிகக் கொடூரமாக பொதுமக்களை நோக்கி மேற்கொள்ளப்படுவதால் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை மேலும் மோசமடையலாமென தமிழ் நெற்றில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-3,5,14)


### தொழிற் பயிற்சிகள்

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புப் பெறக்கூடிய முறையில் முழுநேர செய்முறைப் பயிற்சிகளுடன் பயிற்சியளிக்கப்படும்.

❖ Mobile Phone Repairing
Hard Ware — Hard Ware Repairing
Soft Ware — Phone Lock — காலம்:- 3 மாதங்கள்

❖ Diploma in Hard Ware Engineering — காலம்:- 3 மாதங்கள்

❖ ரேடியோ, ரெலிவிசன், வீடியோடெக் ரிப்பியறிங்
சகல இன ரேடியோக்கள், ரெலிவிசன், வீடியோ டெக், CD,Amp திருத்துதல் பயிற்சியளிக்கப்படும். — காலம்:- 9 மாதங்கள்

❖ ஏயர் கொண்டிசனிங்
சகல குளிர் சாதனப் பெட்டிகள், ஏயர்கொண்டிசன்கள் திருத்தும் முறைகள் பயிற்சியளிக்கப்படும். — காலம்:- 6 மாதங்கள்

❖ எலக்ரிக்கல் வயறிங்,றீவைண்டிங்,வீட்டு மின் வேலை,மோட்டார், Fan,Transformer வைண்டிங் செய்யப்படும் முறை பயிற்சியளிக்கப்படும். — காலம்:- 6 மாதங்கள்

ஆரம்பம் :- 30.01.2009 (வெள்ளி), 01.02.2009 (ஞாயிறு)

JAFFNA TECHNICAL INSTITUTE
இல., 45 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 6434, 0779254078, 0718561654
(C-2068)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.